

குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய பார்வையில்
தாயுமானவரின்
எந்நாள் கண்ணி பாகம் 1
அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்.
• டிசைன் ~ தவம் ஆர்ட்ஸ் •

# வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம் 1

அருள்நிதி மன்னார்கடி பானுகுமார்

## இதனுள்ளே

1. கடவுளை காணும் நாள் எந்நாளோ?
2. குருவைச் சாரும் நாள், எந்நாளோ?
3. உடல் பற்று அறுவது எந்நாளோ?
4. நான் என்ற தன்முனைப்பு
5. மடவார் மயக்கு ஒழிவது எந்நாளோ?
6. தன்முனைப்பு எப்போது போகும்?
7. உன்னை அறிந்தால்...நீ உன்னை அறிந்தால்
8. ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ?
9. மெய்ஞ்ஞான மெய்விளக்கு
10. வஞ்சக்காரர்கள் கை கோவாமல்

## 1. கடவுளை காணும் நாள் எந்நாளோ?

ஒரு நாள் ஸ்ரீ ராமகிருஷ்ணரைக் காண நரேன் தட்சனேசுவரம் சென்றான். ஸ்ரீ ராமகிருஷ்ணருக்கு அவனைக் கண்டதில் கொள்ளை மகிழ்ச்சி.

உடனேயே உள்ளே சென்று இனிப்புகளைக் கொண்டு வந்து, அவனை ஒரு சிறு குழந்தையாகக் கருதி அவனுக்கு ஊட்ட ஆரம்பித்து விட்டார். அவன் மீது பேரன்பு கொண்ட அன்னையானார் அவர்.

பிறகு நரேன் தான் இதுவரைப் பல குருமார்களிடம் கேட்ட அந்தக் கேள்வியை அவரிடம் கேட்டான்:

‘ஐயா, தாங்கள் கடவுளைக் கண்டிருக்கிறீர்களா?’

‘ஆம், உண்மையில் தரிசித்திருக்கிறேன் என்று பதிலளித்தார் ஸ்ரீ ராமகிருஷ்னர்.

‘உன்னைப் பார்ப்பதைப் போலவே, அவரையும் தெளிவாகப் பார்க்கிறேன். உன்னைக் கண்டு பேசுவது போலவே, ஒருவரால் கடவுளைக் காணவும் பேசவும் முடியும் என்றும் கூறினார்.

இந்த பதிலைக் கேட்டு நரேன் ஆச்சரியமடைந்தான். அவன் உள்ளம் ஆனந்தத்தால் நிறைந்தது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறிய அனைத்தையும் அவன் கவனமாகக் கேட்டான்.

‘நான் தேடிக் கொண்டிருந்த குரு இவரே! என்று நரேனின் மனம் கூறியது. நரேன் அவருடைய சீடன் ஆனான்.

ஸ்ரீ ராமகிருஷ்னர் கடவுளைக் கண்டவர் என்று நரேன் அறிந்திருந்தான். இருப்பினும், கேள்விகள் கேட்காமல் எதையும் அவன் ஒப்புக் கொள்வதில்லை.




இதையேஸ்ரீ ராமகிருஷ்ணரும் விரும்பினார்.

தன்னிடம் வந்த இளைஜர்கள் சுயமாக சிந்திப்பதையும், கேள்விகள் கேட்பதையும் அவர் வரவேற்றார்

கடவுளை காணலாமா என்று அறியாமல் புரியாமல் உணராமல் இருக்கும் தன் நிலைமையை, தாயுமானவர் இந்தப்பாடலில் புலம்புகிறார்.

தாயுமானவர் தனக்காகப் புலம்பவில்லை. மானுடத்திற்காக புலம்புகிறார்.

உண்மையில் கடவுள் யார்? எங்கே உள்ளார்.!
ஏன் நமக்கு இந்த கலக்கம்.

"உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்
வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்
தெள்ளத் தெளிந்தார்க்கு ஜீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்தும் காளாமணி விளக்கே" (திருமந்திரம்)

திருமந்திரம் கூறும் சத்தியம் இதுவே! தமிழ் மறையான இதுவே நாம் அறிந்து கொள்ள வேண்டிய மிகப்பெரிய உண்மை ஞானம்! இறை இரகசியம்!

நம் உடலாகிய கோயிலில் உயிராக தானே வீற்றிருக்கிறான் எல்லாம் வல்ல இறைவன்! இறைவன் பெருஞ் ஜோதியானவன் எங்கும் நிறைந்தவன்!

இறைவனே ஜீவனாக சிறு ஜோதியாக நம் உடலில் உறைந்துள்ளான்! என்ன விந்தை இது?
அவனே படைத்து, காத்து, அழித்து, எதற்கு இந்த நாடகம்?! ஏனிந்த திருவிளையாடல்!

நீர்பூத்த வேணி நிலவுஎறிப்ப மன்று ஆடும்
கார்பூத்த கண்டனையான் காணுநாள் எந்நாளோ. (தா.பா.1083)

- கங்கை தங்கிய சடையில்,
- நிலவு ஒளிவீச,
- தில்லைச் சிற்றம்பலததில்ஆடுகின்ற,
- கரிய நிறக் கண்டம் உடையவனை,
- யான் காணும் நாள், எந்நாளோ?

## கடவுளை காணலாமா? வேதாத்திரியம்

முதற்பொருள் எது என்று தெரியாமல் புரியாமல் உணராமல் தவிக்கிறார் தாயுமானவர். தாயுமானவர் மட்டுமல்ல மானுடமே -- கடவுள் எது? முதற்பொருள் எது? தெரியாமல் புரியாமல் உள்ளது.

தாயுமானவரைப் போலவே தெய்வத்தை மானுடம் தேடிக்கொண்டுதான் இருக்கிறது என்கிறது வேதாத்திரியம்.

தெய்வத்தை நாடுவதும். தெளிந் தறிவில் தேறுவதும்,
திருநிலையாம் மனிதனவன் பிறவிநோக்கம், பயனாம்.
தெய்வநிலை தெரிந்து கொண்டேன். திருவருளே நானாகத்
திகழும்அனுபவம் எனக்கு இல்லை என்பர் சில்லோர்.
தெய்வமெனும் பாலைப் பிறைஇட்டுத் தயிராக்கிப் பின்
தேடுகிறார் பாலை! அதைக் காணேன் என்றால் மயக்கே!
தெய்வம் உயிர்க்குள் அறிவாய், அதன் படர்க்கையிலே
திழ்கிறது மனமாக! தேடுவது எதை? எங்கே?” (ஞாக.பா.1696)

உண்மையில் கடவுள் என்பது என்ன? விடைதருகிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிஷி.

- இறைநிலை, கடவுள், பரம்பொருள், கடவுள் துகள், இறைதுகள், கும் இருட்டு, சுத்தவெளி, வெட்டவெளி இதுவே கடவுள். கடவுள் என்பது ஜடபொருள். கடவுளை வெட்டவெளியாக வணங்க வேண்டும்.
- கடவுளுக்கு உருவம் என்பது இல்லை. அது ஒரு இறைதுகள் . மனித உடம்பினுள் இருக்கும் உயிர் இறைதுகளால் ஆனது. மனிதனே கடவுள். மனிதன் கடவுளாக மாறலாம் என்பதை உணர்த்துவதற்காக உருவமாக சித்தர்கள் வழிபட்டனர்.

- சுத்தவெளி தான் இறைநிலை. இதுவே தான் கடவுள் ஆகும். இறைநிலையானது எல்லாம் வல்ல பூரணப் பொருள். இதன் இயல்பான தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும்ஆற்றலால் அதற்குள்ளாகவே செறிவு ஏற்பட்டு மடிப்புகள் விழுந்து, அதன் சூழ்ந்தழுத்தும் ஆற்றலாலேயே மிக விரைவான தற்சுழற்சி பெற்ற நுண்துகள்கள்தான் முதல்நிலை விண் எனும் பரமாணு.

- இந்த நுண்ணணுக்களின் கூட்டங்களே பேரியக்க மண்டலத்தில் காணும் அனைத்துத் தோற்றங்களும் ஆகும். முதல் நிலை விண்களின் விரைவான தற்சுழற்சியானது அதைச் சுற்றியுள்ள தன்னிறுக்கச் சூழ்ந்தழுத்தும் ஆற்றலான இறைவெளியோடு உரசும்போது எழுகின்ற நுண் அலைகள் தாம் காந்தம் எனும் நிழல் விண்கள்.

- நிழல் விண்கள் இறைவெளியின் சூழ்ந்தழுத்தத்தைத் தாங்க முடியாமல் கரைந்து போகும் நிகழ்ச்சிகள் தான் அழுத்தம், ஒலி, ஒளி, சுவை, மணம், மனம் என்பனவாகும்.

- இறைவெளியானது முதல் விண், நிழல் விண், காந்தம், காந்தத் தன்மாற்ற நிலைகளான அழுத்தம் முதல் மனம் வரையிலான ஆறுவகை, இவற்றை மனதில் பதிய வைத்துக் கொண்டு பிரபஞ்சத்தை எண்ணிப் பார்த்தால், ஆராய்ந்தால் பேரியக்க மண்டலத் தோற்றம், இயக்கம், விளைவுகள் அனைத்தும் விளங்கிவிடும்.

- பரமாணு முதல் கொண்டு எந்தப் பொருளும் இறை நிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும். எல்லா இடங்களிலும் இறைநிலையாகவே இருக்கும் காட்சி அறிவிற்கு உண்டாகும்.

- எல்லா இடங்களிலும், எக்காலத்திலும் எல்லாப் பொருட்களிலும் இறைநிலையை உணரக்கூடிய பேரறிவுதான் பிரம்மஞானம் எனப்படுகின்றது என்பது வேதாத்திரியம்.

"சுத்தவெளி தெய்வம் என்ற உண்மை மறந்திட்டு,
சூதாட்டமாய் உருவச் சிலைகளையே காட்டி,
அத்துவிதம் எட்டினிலே. அனைத்து செயல் குற்றங்கள்
அனைத்துலகும் இச்சேற்றில் ஆழ்ந்து கிடப்பதனால்
உத்தமமாம் உயர்அறிவு ஒளிவிடுவதில்லை. அதனால்
ஒருவர் பிறர் வாழ்வின்வளம் பறித்து வாழலாச்சு!
வித்தையில்லை! விளக்கமிது...." (ஞாக.பா.1348)

## சுத்தவெளி ஒரு பேராற்றல்

நாம் எங்கே வாழ்கிறோம்?



பூமி, உருண்டை என்ற உலகின் மீது. இந்த பூவுலகின் எடை என்ன இருக்கும்? பல கோடி டன்கள் இருக்கலாம் அல்லவா?

இதே உலகம் ஆண்டுக்கு ஒரு முறை சூரியனை வலம் வந்து கொண்டிருக்கிறது. இந்த சூரியனின் எடை எவ்வளவு இருக்கும்?

பூமியைவிட சூரியன் 3.33 லட்சம் தடவை எடை அதிகமாக உள்ளது. இப்பொழுது யூகிப்போம். சூரியனும், பூமியும் சேர்ந்தால் மொத்த எடை எவ்வளவு இருக்கும்?

நம்மால் சாதாரணமாக கணக்கிடவே முடியாது. எனினும், நமது யூகத்தால் ஓரளவு அனுமானம் கொள்ளலாம். சூரியனும், பூமியும் சேர்ந்து கணக்கிலடங்காத கோடி கோடி டன்கள் எடை இருக்கும் என்று நம்பலாம்.

அடுத்தபடியாக, சூரியனும், பூமியும் எங்கே இருக்கின்றன? இரண்டு கோள்களுமே சுத்தவெளியில்தான் லேசாக மிதந்து, உருண்டு ஓடிக் கொண்டிருக்கின்றன.

இது மறுக்க முடியாத உண்மை. இப்பொழுது சிந்திப்போம். ஒரு பொருள் மீது இன்னொரு பொருள் மிதக்கிறது என்று சொன்னால் எந்தப் பொருள் வலிதாக இருக்கும்?

மிதக்கும் பொருளைவிட தாங்கும் பொருள்தான் வல்லமை உடையாதாக இருக்க வேண்டும்.

இந்த கருத்தை மனதால் கணித்துப் பார்த்தோமானால் சூரியன், பூமி இரண்டைவிட சுத்தவெளி அதிக வல்லமை உடையதுதான் என்று ஐயமின்றி விளங்கிக் கொள்வோம்.

இதனால், சுத்தவெளி எந்த ஆற்றலும் இல்லாத ஒரு வெற்றிடம். அல்லது சூன்யம் என்ற கருத்து மாறிவிடுகிறது.

நமக்குத் தெரிந்த சூரியக் குடும்பத்தையும் மேலும் ஆகாய வெளியில் உலவும் கோடிக்கணக்கான சூரியக் குடும்பங்களையும் லேசாகத் தாங்கிக் கொண்டிருக்கும் சுத்தவெளியின் பேராற்றலும்

அதன் வல்லமையும் இணையற்றது என்று விளங்கிக்கொள்கிறோம். என்று விளக்குகிறது வேதாத்திரியம்.

இப்பொழுது தாயுமானவரின் வினாவிற்கு விடை கிடைத்துவிட்டது. தெளிவு பெற்றுவிட்டோம். தெளிவே ஞானம் என்கிறது வேதாத்திரியம்.

“இறைநிலையே சுத்தவெளி.
இருப்பு நிலையென்ப திது.
இது அறிவாம். “நான்” "நீ” ஆகும்!

மறைபொருளாம் இருப்புநிலை
மலர்ந்து, அலைநிலைகளாய்
மாறியதே விண்முதல் பிரபஞ்சம் ஆம்!

நிறைநிலையே நுண்பகுதி.
நிலையில்லா அலையாகி,
நீள்படர்க்கையில் உணர்வாய், உயிர்களாச்சு!”

கறைபோன்ற தன்முனைப்பில்,
கர்மங்கள் பதிவேற்று
கலங்கி வருந்திக் கண்ட,
தெளிவே ஞானம்!” (ஞாக.பா.1700)

சுத்தவெளி என்ற பெருவெளியே தெய்வம் என்று உணர்ந்து கொண்டோம். புரிந்து கொண்டோம். சுத்தவெளியோடு இமைப்பொழுதும் நீங்காமல் நட்பு கொண்டு ஆனந்தமாக வாழ்வோம்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். வாழ்க வளமுடன்.

## 2 குருவைச் சாரும் நாள், எந்நாளோ?

பலநாட்களாக ஒருவன் குருவை தேடி வந்தான்...எங்கு சென்றாலும் அவனுக்கு குரு கிடைக்காத நிலை ஏற்பட்டது.

சில ஆசிரமங்களுக்கு சென்றால் அங்கு மடாதிபதியாக இருக்கும் குருவை நெருங்க பல தடைகள் இருந்தது.

தனக்கு அருகில் இருந்து கற்று கொடுக்கும் குருவை எதிர்பார்த்து ஏங்கினான்.

ஒரு ஞானி இருப்பதாக கேள்விப்பட்டு அவரிடம் சென்று தனது குருவை பற்றி கேட்போம் என எண்ணினான்.

ஞானியின் இருப்பிடத்திற்கு சென்று அவற் றை சந்திக்கும் பொழுது ஞானியோ கோமணத்தை கட்டிக் கொண்டு, வீட்டிற்கு முன்பு இருந்த சாக்கடையை சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

அவரின் முழங்கால் வரை சாக்கடையும், சகதியுமாக இருந்தது. சாக்கடையை அவர் கலக்கி சுத்தம் செய்வதால் அந்த இடம் முழுவதும் ஒரே துர்நாற்றம் வீசியது.

ஞானியிடம் சென்றவன்.."ஐயா நீங்கள் மகா ஞானி என கேள்வி பட்டிருக்கிறேன். பல சித்திகள் உங்களிடம் உள்ளதாம். தயவு செய்து எனது குரு எங்கிருக்கிறார் என கூறுங்கள்" என்றான்.

ஞானி அவனைப்பார்த்து புன்னகைத்தவாரே கூறினார்..."எவன் ஒருவனுக்கு உடலை சுற்றி ஒரு ஒளிவட்டம் இருக்கிறதோ, அவனை நெருங்கினால் ரோஜா பூவின் மனம் கமழுகிறதோ அவனே உனது குரு"

உடனே அங்கிருந்து புறப்பட்டு காடு மலை என அனைத்து இடங்களிலும் குருவைத் தேடி அலைந்தான்.

பல வருடங்கள் ஆனது. உடல் இளைத்து துரும்பனது. இதற்கு மேல் தேட முடியாத நிலையில் ஓர் மரத்தடியில் அமர்ந்தான்.

திடீர் என அவனது நாசியில் ரோஜா பூவின் நறுமணத்தை உணர்ந்தான். மரத்தின் பின்பகுதியில் கண்கள் கூசும் ஒளி வீசுவதை கண்டான்.

"எனது சிஷ்யனே உனக்காகவே காத்திருக்கிறேன், வா எனதருகில்"

மகிழ்ச்சியான மனமும் உற்சாகமான துள்ளலுடன் அருகில் சென்றான்.

அருகில் சென்று பார்க்கும் பொழுது, அங்கு அவனுக்கு வழி காட்டிய ஞானி உட்கார்ந்திருந்தார்.

கண்களில் நீர் வடிய...கைகள் துடிக்க அவரின் கால்களில் விழுந்தான்.

பின்பு அவரிடம் "...குருவே பலவருடத்திற்கு முன்பு உங்களிடம் வரும் பொழுதே ஏன் நீங்கள் தான் எனது குரு என கூறவில்லை? என்னை ஏன் காக்க வைத்தீர்கள்?" என கேட்டான்.

"குழந்தாய் நீ முதல் முறை வரும் பொழுதே என் உடலில் ரோஜாவின் சுகந்தமும், உடலில் ஒளியும் வீசியது. அப்பொழுது நான் சாக்கடை சுத்தம் செய்து கொண்டிருந்ததால் உனக்கு என் மேல் கவனம் இல்லை. உனது அறியாமையால் அதை உணர முடியவில்லை. எனது குரு எங்கே என கேட்டாயே தவிர, நீங்கள் எனது குருவா? என கேட்கவில்லை.

அதனால் நான் உனக்கு குரு எங்கே என சொன்னேனே தவிர நானே உனது குரு என கூறவில்லை. பல வருட முயற்சியால் இப்பொழுது உனது அறியாமை அகன்றது, என்னை கண்டு கொண்டாய்"

சிஷ்யனின் மனதில் ஒளி வீச தொடங்கியது..... ஆன்மீக நறுமணமும் கமழ்நதது.

என் அறிவை உள் அடக்கி என்போல் வரும்மவுனி
தன்அறிவுக்கு உள்ளேநான் சாருநாள் எந்நாளோ (தா.பா.1102)

- என் அறிவை அடங்குமாறு செய்து,
- என்போல் மௌனியாய் எழுந்தருளி வந்து,
- தன் அறிவுக்குள்ளே, என்னை அடக்கிக் கொண்ட குருவைச் சாரும் நாள், எந்நாளோ?

அண்டமதில் உருவெடுத்து அறிவைப் பெற்று
அவ்வறிவு ஒன்றுமுதல் ஆறதாகிக்
கொண்டமேலாம் இவ்வுருவில் குறிப்பில்லாமல்
கோடான கோடியெண்ணி அனுபவித்துக்
கண்டபலன் எனையறிய நினைந்தேனப்போ
கனல்மூட்டிக் கருவெழுப்பிக் கருத்துணர்த்தி
குண்டலினியெனும் என் மெய்யுணர் வெழுப்பிக்
குறித்து எனையறிவித்த குருவே அன்பே" (ஞாக.பா.5)

குரு என்பவர் ஒருவருக்கு அவசியமா? வேதாத்திரியம்

உலகில் ஒவ்வொரு உயிரினமும் தன் வாழ்க்கைப் பற்றிய அறிவை தன் சக உயிரினங்களிடமிருந்து தான் பெறுகின்றது.

உடை உடுத்தலை, உண்ணுதலை, உறங்குதலை, கூடிப்புணர்தலை, இயற்கை உந்துதல் கொடுத்தாலும் அது சக உயிரினங்கள் சொல்லிக் கொடுக்க, அந்த அனுபவத்தை கிரஹித்துக் கொண்டு இன்னும் சீராக வாழ்கிறது.

இந்த சீரான வாழ்க்கைக்கு நாகரீகம் என்று பெயர்.
எல்லா செயல்களையும் நீங்கள் பிறரிடமிருந்து கற்றுக் கொள்கிறீர்களே அன்றி எதையும் நீங்களாக அறிந்து கொள்ளவில்லை.

அறிந்து கொண்டதை நேர்த்தியாக செய்கிறீர்கள் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

ஆனால், வாழ்வின் அறிவு என்பது சக உயிரினமிடத்திருந்தே வருகிறது.

தலை வாருதலிலிருந்து காலணி அணிவது வரை மற்றவர்கள் சொல்லி தந்துதான் அறிந்து கொள்கிறீர்கள் என்கிற போது வாழ்வின் ஆதாரமாக உள்ள ஆத்ம தாகத்தை, உயிரின் தவிப்பை, தன் இருப்பை அறிவது என்பதை எவரும் அறியாமல் நீங்களாக உணர்ந்து கொள்ள முடியுமா?

இதை நானாக தெரிந்து கொள்வேன் என்று இறுமாந்து திரிவது நல்லதா. கடவுள் அறிதல் அல்லது தன்னை அறிதல் என்கிற விஷயத்திற்கு வெகு நிச்சயம் ஒரு வழிகாட்டி தேவைப்படுகிறார். அந்த வழிகாட்டிக்கு குரு என்று பெயர்.

குரு என்பவர் சாக்கு போக்குக்காக உங்களை சில மந்திர ஜபங்கள் செய்யச் சொல்லி, பூஜைகள் செய்யச் சொல்லி மெல்ல மெல்ல பிரம்ம ரகசியத்தை உபதேசிப்பார் என்று சொல்லப்படுகின்றது.

கடவுள் தேடுதல் எதற்காக என்ற கேள்வி எழவில்லையெனில் வாழ்வு பூரணமாகவில்லை என்று அர்த்தம்.

வாழ்வினுடைய தினசரி விஷயங்களில் அலுப்பு ஏற்பட்டு இது என்ன வாழ்க்கை என்ற கேள்வி எழுகிற போது கடவுளைப் பற்றிய தாபம் அல்லது தன்னை அறிதலைப் பற்றிய ஏக்கம் எழுகிறது. அப்பொழுது வெகு நிச்சயம் குரு என்பவர் தேவை.

அந்த குரு தன்னை அறிந்தவராக இருக்கிறபொழுது உங்களுடைய தவிப்பை முற்றிலுமாய் உணர்ந்து உங்களை அறியாமல் உங்களை உங்களுக்குள் தள்ளுகின்ற ஆற்றலையும் பெற்றிருப்பார்.

அந்த ஆற்றல் மிக ரகசியமாய் உங்களில் பாய்ந்து உங்களுக்குள் உங்களை அறிவிக்கும். இது விஞ்ஞான பாடமல்ல.

அடிப்படையாய் புரிந்து கொள்வதற்கும், பேசி தெரிந்து கொள்வதற்கும். தடித்த புத்தகங்களிலிருந்து கற்று கொள்வதற்குண்டான விஷயமுமல்ல.

இது ரகசியமானது. ரகசியம் என்பதற்கு வேறு ஒருவருக்கு சொல்லக்கூடாது என்ற அர்த்தமில்லை. எப்படி உள்ளே வந்தது என்றே தெரியாத ரகசியம் இது.

நீங்கள் எப்படி மாறினீர்கள் என்றே தெரியாத ரகசியம் இது. உங்களை அறியாது உங்களை மாற்றுவது என்பது தன்னை அறிந்த குருவால் வெகு நிச்சயம் இயலும்.

எனக்கும், கடவுளுக்கும் இடையே இன்னொருவர் எதற்கு என்று கேள்வி வருவது மிகப் பெரிய அறியாமை.

உங்களை அறிவது தான் சரியான அறிவு. ஆனால் தன்னுள் தான் மூழ்குவது என்பது மிக மிக கடிமனான விஷயம்.

குரு என்பவரால் மட்டுமே உங்களை உங்களுக்குள் தள்ள முடியும். தங்களை அறிய வேண்டும் என்ற ஆவலுள்ளவர்களுக்கு குருவினுடைய தேடலும் கூடவே வரும். அவருக்கு குரு அவசியமா என்ற கேள்வியே இருக்காது. குரு எங்கே என்கிற ஆவல்தான் இருக்கும்.

யார் குரு. நான் தான் குரு என்று சொல்லிக் கொள்கிறவர்கள் உங்களுக்கு குரு அல்ல. தன்னை உணர்தலே கடவுள் உணர்தல் என்கிற மகாவாக்கியம் உணர்ந்தவரே குரு.

அவர் தன்னை உணர்ந்தவர் என்று சொல்லிக் கொள்வதே இல்லை. கடவுள் தெரிந்துவிட்டது என்று குதிப்பதும் இல்லை. மாறாய் அவர் வாழ்க்கை முற்றிலும் மற்ற மனிதர்கள் வாழ்க்கையிலிருந்து வேறுபட்டிருக்கிறது.

வாழ்வின் அநித்தியம், வாழ்வின் அபத்தம் புரிந்தபோது உள்ளுக்குளிலிருந்து ஒரு கருணை வெள்ளம் புறப்பட்டு சகலரையும் அணைத்து கொள்கிறது.

யாரை வேண்டுமானாலும், எப்பொழுது வேண்டுமானாலும், எங்கு வேண்டுமானாலும் இழந்து தொலைப்போம் என்கிற பரிதவிப்பு இருப்பின் யாரை வெறுக்க முடியும்.

எவரும் இங்கே நிரந்தரமில்லை என்கிறது மிக தெளிவாக வந்து விட்டால் எவரை வெறுக்க முடியு ம் எனவே எவரையும் வெறுக்காத கருணை மழை தான் குரு.

கருணை உள்ளவர் முகத்தில் அற்புதமான தேஜஸ் இருக்கும். அவர் ஒவ்வொரு அசைவும் அன்பை பொழியும்.

கடவுள் ரூபமாகவே இருக்கும். அந்த குரு உபன்னியாசம் செய்கிறவர் அல்ல.

மிக பெரிய பிரசங்கங்கள் நிகழ்த்துவதை காட்டிலும் தனித்தனியே ஒவ்வொரு மனிதரின் உள்ளுக்குள் இருக்கின்ற ஆன்மாவைத் தொட்டு உசுப்பிவிடுவது தான் குருவின் வேலை.

எவரைப் பார்த்ததும் உள்ளுக்குள் பெரிதாய் ஒரு கிளர்ச்சி ஏற்பட்டு அவரை உங்களை அறியாமல் வணங்கத் தோன்றுகிறதோ அவரை பின்பற்றத் தோன்றுகிறதோ, அவரை கொண்டாட ஆசை எழுகிறதோ, அவரை உங்கள் குரு என்று கொள்ளலாம்.

குருவை ஒரு குறிப்பிட்ட இடத்தில், ஒரு குறிப்பிட்ட ரூபத்தில், ஒரு குறிப்பிட்ட அடையாளத்தில் கண்டுகொள்ள முடியாது.

குரு மனிதராகத் தான் இருக்கவேண்டும் என்ற அவசியமும் இல்லை. பெரும் வானம் சிலருக்கு குருவாக அமைந்திருக்கிறது.

காற்றின் இரைச்சல் குருவாக அமைந்திருக்கிறது. குரு தேடுதல் என்பது மனம் ஒருமுகப்பட்ட ஒரு உணர்வு. அந்த உணர்வு நிச்சயம் தேடுபவருக்கு குருவை கொண்டு வந்து கொடுக்கும்.

# 3. உடல் பற்று அறுவது எந்நாளோ?

பட்டி த்தா ரைப் போல் அருணகிரிநாதரைப் போல் தாயுமானவரும் உடலை நிந்திக்கிறார்.

இந்த வாழ்க்கையில் உடலும் மனமும் அழிந்து போகும். ஆத்மா மட்டுமே அழியாதது. உடல் அழியும் போது மானுடப் பிறவி முடிகிறது.

அழியாத ஆத்ம சொரூபத்தை உணர்வதற்கு இக் காயத்தையும் மனத்தையும் பயன்படுத்த வேண்டும்.

ஆனால் அழியாத ஆத்ம சொரூபத்தை மறந்துவிட்டு அழியும் காயத்தை அழியாது காப்பதில் கவனம் செலுத்தி வருகிறோம்.

அழிந்து போகின்ற காயத்தை அழியாது வைத்திருப்பதற்கு யாருக்கும் இயலாது. விரைவில் அழிந்து போகின்ற காயத்தைச் சிறிது நாளைக்கு வேண்டுமென்றால் நீடித்திருக்கச் செய்யலாம்.

ஹடயோகம் பயின்று சிறிது நாளைக்குக் காயத்தைக் காப்பாற்றி வைக்கலாம். ஆனால் காயம் ஒரு நாளைக்கு அழிந்தே போகும்.

பெய்யான காயத்தை மெய் என்று கருதி வாழ்க்கையை வீணாக்கி வருகின்றோம். காயத்தைப் பொய் என்றும், ஆத்மாவை மெய் என் ற ம் அறிகிற அறிவுதான் மெய்யறிவு.

காயத்தை பொய் என்றும் ஆத்மாவை மெய் என்று உணர்கின்ற உணர்வுதான் மெய் உணர்வு ஆகின்றது.

இவ்வுண்மையை அறியாத மனிதர்களைப் பார்த்து தாயுமானவர் கேள்வி கேட்கிறார்.

உலகத்தவர்களே! சரீரமானது அழிவது திண்ணம். அது அழியும் தன்மையுடையது. அழியும் தன்மையுடைய சரீரத்தை நீங்கள் மெய் என்று நினைப்பதற்குக் காரணம் என்ன? என்று கேட்கிறார்.

## சரீரம் பொய் எனக்கூறும் பட்டினத்தார்

- மனம்போன போக்கில வாழும் கனவு போன்ற பொய்யான வாழ்வும்-
- உயர்ந்த பொருளை அறியாத குற்றம் பொருந்திய மனமும்-
- அறியாமையை விளைவிக்கும் ஆணவ மலத்தில உதித்து, அதிலேகிடந்து உழலும் நிணத்தில் தோன்றி நெளியும் புழப் போன்ற சிந்தையும்-
- வஞ்சனையும் பாவமும் நிறைந்த பழிப்பிற்குரிய நினைவும்-
- குற்றமும் பொறாமையும் உலே பமும் பொல்லாங்கும் கபடமும் பொய்யும் அதன் பதிவுகளும்-
- பெரிய கோபமாகிய பகையும்-
- தாழ்ச்சிக்குக் காரணமான இழிசெயல்களும்-
- பகையும் பயமும் துணிச்சலும் நடுக்கமும் இராசத,தாமச, சாத்வீக குணங்களால் வரும் குற்றமும் உடைய உடல்.

## மலம் ஊறித் ததும்பும் உடலைமெய் என்று

எலும்பு, தசை, நரம்பு முதலியவைகளைக் கொண்டு ஆன சரீரம் ஜடமயமானது. ஜீவாத்தமன் தான் செய்த வினையைத் தீர்த்துப் பராமாத்மனை அடைவதற்குச் சரீரம் தரப்பட்டுள்ளது.

அக்ஞானத்தோடு கூடிய ஜீவன் அழிந்துபோகும் சரீரத்தைச் சத்தியமானது என்று எண்ணி அதற்கு மதிப்பு மிகத்தந்து வருகின்றான்.

சரீரத்தைப் பயன்படுத்திப் பேரானந்தத்தைப் பெறுவதற்குப் பதிலாக சரீரத்தில்தான் சுகம் இருக்கிறது என்று கருதி சிற்றின்ப வசப்பட்டிருக்கும் ஜீவன் உய்வது எப்படி?

ஊனுடம்பை பொய் என்கிறீர்களே! பல மகான்கள் ”ஊனுடம்பே ஆலயம்” ”உள்ளம் பெருங்கோயில்” ”கள்ளப்புலனைந்தும் காளா மணிவிளக்கே” என்றெல்லாம் உடம்பை புகழ்ந்திருக்கிறார்களே? என்ற கேள்வி எழலாம்.

இறைநிலையை இறையுணர்வை பெறுவதற்கு இந்த உடலும் மனமும் தேவைதான். எந்த அளவுக்குத் தேவையோ அந்த அளவுக்கு உடம்பை பேணலாம்.

அளவுக்கு மேல், உடம்பே பிரதானம் என்று உடலை போற்றுகிறவர்களுக்கும், நிலையான மெய்ப்பொருளை விட உடல்தான் முக்கியம் என்று கருதிக் கொண்டிருப்பவர்களுக்கும் தான் இந்த உபதேசங்கள்.

நீர்க்குமிழிக்குப் பூண் அமைத்து மடநின்றாலும் நில்லமெய்

பார்க்கும் இடத்துஇதன்மேல் பற்று அறுவது எந்நாளோ?(தா.பா.1117)

- நீர்க்குமிழி பூண் கட்ட முடியாதவாறு போல
- உடலும் நிலை இல்லாதது என்பது உணர்ந்து,
- இதன்மீது வைத்த பற்றை அறுக்கும நாள், எந்நாளோ?

## உடம்பினுள் உத்தமனைக் காண்க – வேதாத்திரியம்

தியானம் ஆன்மீக வழிபாட்டின் உயர் மட்ட நிலையாகும். உலகியல் சிந்தனைகளில் ஈடுபட்டு காரணமின்றி மனம் அலையாய் அலைகிறது.

உள்மனத்தில் ஒரு போராட்டமே நிகழ்கிறது. அந்த மனத்தின் அலைச்சுழலை ஒருநிலைப்படுத்தி இறை நிலையோடு அதை ஆழ்த்துவதே தியானம்.

மனவலிமை, மன அமைதி, மனநிறைவு, மனதில் ஒரு தெய்வீகத்தன்மை இழையோடும் ஆனந்தம், வெற்றிகளையும், தோல்விகளையும் சம்மாக பாவிக்கும் தன்மை, அனைத்தும் தியானத்தால் அடையும் நன்மைகள்! மன ஒருமைப்பாடு இல்லாதவன் எதிலும் வெற்றி கானவே இயலாது.

நம்முள்ளேயே அறிவாக இருக்கும் இறைவனை அறிந்து கொள்ள தியானம் அடிப்படையாகும்.

"உடம்பினைப் பெற்ற பயன் ஆவதெல்லாம்
உடம்பினுள் உத்தமனைக் காண்க"

என்பது ஔவையார் வாக்கு.

இவ்வுடலைக் கொண்டுதான் ஆன்மாவை அறியலாம்! ஐம்புலன் அடக்கம், நம்முள் உள்ள தேவையில்லாததை நீக்குதல், தேவையேயில்லாத உடம்பின் சுகங்களுக்கு எல்லை கட்டுதல் தியானப் பயிற்சியில் நாம் பெறமுடியும்.

தியானம், (தவம்) செய்ய தயங்காதீர்கள்! எளிய முறையில் நிறைவான தியானம் செய்வதற்கு பழக்கும் நிலையம் தான் மனவளக்கலை மன்றங்கள்! அறிவுத் திருக்கோயில்கள்!

மகான் வேதாத்திரி மகரிஷியின் தத்துவ பயிற்சிகளே மனிதனை மாமனிதனாக மாற்றும் அன்பர்களே! மன்றத்திற்கு வாருங்கள்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.




# 4. நான் என்ற தன்முனைப்பு

மன்னன் ஒருவன் இருந்தான். ஆணவம் மிக்கவன். அமைச்சரை அழைத்து, "அமைச்சரே, நான் இறைவனைக் காண வேண்டும். அதற்கு என்ன வழி?'' என்று கேட்டான்.

"நம் நாட்டு எல்லையில் ஒரு மாமுனிவர் இருக்கிறார். அவரிடம் கேட்டால் இறைவனைக் காண வழி சொல்லுவார்'' என்றார் அமைச்சர்.

அரசனும் தனது பரிவாரங்களுடன் புறப்பட்டு, முனிவர் இருந்த இடத்தை அடைந்தான்.

முனிவரும் வந்திருப்பது அரசன் என்று அறிந்தும், அறியாதது போல "மகனே, நீ யார்? உனக்கு என்ன வேண்டும்?'' எனப் பரிவுடன் கேட்டார்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. "என்னைப் பார்த்தா யார் என்று கேட்கிறார்'' என நினைத்தான்.

எனினும் கோபத்தை அடக்கிக் கொண்டு, ""நான் இந்நாட்டு அரசன். இறைவனைக் காண எனக்கு வழி சொல்லுங்கள்'' என்று ஆணவம் கலந்த தொனியில் கேட்டான்.

"இறைவனைக் காண வேண்டுமா? நான் செத்த பிறகு வா'' என்று அழுத்தமாகக் கூறிவிட்டு, மீண்டும் தியானத்தில் ஆழ்ந்தார் முனிவர்.

மன்னனுக்குக் கோபம் வந்தது. ""நீங்கள் செத்த பிறகு எப்படி வர முடியும்? எப்படி என்னோடு பேசுவீர்கள்?'' என்று கேட்டான்.

"நான் என்பது நானல்ல! உன்னுள் இருக்கும் "நான்' என்ற ஆணவம். அந்த ஆணவம் முதலில் சாக வேண்டும். அதனால்தான் நான் செத்த பிறகு வா, என்றேன். அதுவரை நீ இறைவனைக் காணும் வழியை அறிய முடியாது'' என்றார் முனிவர்.

மன்னன் யோசிக்க ஆரம்பித்தான்.

நம்மை நாமே அறியாமல் இருப்பதுதான் இந்த நான் என்ற ஆணவம். நாம் எவ்வளவு சிறியவர்கள், கடவுள் எவ்வளவு பெரியவர் என்பதை உணராத அறியாமையால் ஏற்படுவதே இந்த நான் என்ற இறுமாப்பு.

இந்த ஆணவம் அழிந்தால்தான் இறைவனை, ஆனந்தத்தை அடைய முடியும்!

ஊன்ஒன்றி நாதன் உணர்த்துமதை விட்டு அறிவேன்
நான்என்ற பாவிதலை நாணுநாள் எந்நாளோ? (தா.பா.1121) உடலில்

- தங்கி இருந்து, இவன் அறிவிப்பதை கவனிக்காமல் விட்டுவிட்டு, நான் அறிவேன் என்று புறப்படும் பாவியின் தலை, நாணத்தால் தாழும் நாள், எந்நாளோ?

## "வெளியில் வா" - வேதாத்திரியம்

திறந்துகொள் தான் தனது என்று சொல்லும்
சிற்றறையை; வெளியே வா; அகன்று நோக்கி
பரந்துலவு உலக சமுதயாத்தின் பரப்பகத்தில்
பற்று அறும், கடமையினால் பழுக்கும் ஞானம். (ஞாக.பா.)

மும்மலங்கள் எனப்படுவது ஆணவம், கன்மம், மாயை.
ஆணவம் என்பது தன்முனைப்பு.

கன்மம் என்பது வினைப் பதிவுகள். மாயை என்பது புலன் கவர்ச்சி. மும்மலங்களுள் முதன்மையானது ஆணவம்.

இது 'தான்' எனும் அகங்காரப் பற்றாகவும், 'தனது' எனும் பொருள் பற்றாகவும் மாறி உடலளவில் எல்லைக் கட்டிக்கொண்டு மாயை எனும் மயக்க நிலையில் இயங்கும்போது க ண் மம் எனும் வினைப் பதிவுகள் கூடிக்கொண்டே செல்வதால் பிறவியின் நோக்கமாகிய முழுமைப்பேறு எனும் வீடுபேறு அடைவதென்பது எட்டாக்கனியாகவே உள்ளது.

'நான்', 'எனது' எனும் எல்லைக்குள் சிக்குண்ட மனதை அதன் குறுகிய நிலையிலிருந்து மீட்டு, சுற்றியுள்ள உலகையும், பிரபஞ்சத்தையும், இயற்கையையும் மனவிரிவு கொண்டு உற்று நோக்கும் போது . . .

பரம்பொருளின் எல்லையற்ற உண்மைநிலையும், அதன் அறிவாட்சித்தரமும், அதன் அன்பும் கருணையும், அனைத்துயிர்களையும் காத்து இரட்சிக்கும் சிறப்பையும் அறிந்துகொள்ளும்போது,

'நான்' எனும் சிற்றெல்லை சிதைந்து, பற்றுகள் நீங்கி, 'நாம்' எனும் சமுதாய உணர்வு மேம்படும்.

ஐவகைக் கடமைகளை முறையாக ஆற்றி சமுதாய உயர்வுக்கு நம்மால் இயன்ற தொண்டு செய்யவேண்டும் எனும் ஞானம் பெருகும்.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## 5. மடவார் மயக்குஒழிவது எந்நாளோ?

“வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருந்த ஒருவன் ஒரு அலுவலக நிர்வாகியிடம் எத்தனையோ தடவை போய் வேலை கேட்டான்.

”இப்பொழுது இடம் காலியில்லை. இடையிடையே வந்து கொண்டிரு. ஏதாவது வேலை காலியாகும்பொழுது அதில் உன்னை அமர்த்துகிறேன்” என்று அந்த நிர்வாகி நம்பிக்கை ஊட்டினான்.

ஆனால் வேலை மட்டும் அந்த ஏழைக்குக் கிடைத்தபாடில்லை.

அவன் சலித்துப்போய் தனது பரிதாபகரமான நிலையை மற்றொருவரிடம் சொல்லிக் கொண்டிருந்தான்.

அப்பொழுது அவனுக்கு ”அந்த நிர்வாகியிடம் வீணாக நடக்க வேண்டாம்.

"அவனுடைய காமக்கிழத்தி குலாப்பிடம் போய் முறையிடு, விரைவில் காரியம் கைகூடும்" என்று ஒரு யோசனை சொல்லப்பட்டது.

அந்த ஏழை மனிதனும் அங்ஙனமே செய்தான். அடுத்த நாள் அவன் ஆள் விட்டு வரழைக்கப்பட்டு அவனுக்கு வேலையும் தரப்பட்டது!

காமத்துக்கு அடிமையாயிருப்பவர்கள் போக்கு இத்தகையது."
(ஸ்ரீராமகிருஷ்ண உபதேச மஞ்சரீ, பக்.50)

தூயபனித் திங்கள் சுடுவதுஎனப் பித்துஏற்றும்
மாய மடவார் மயக்குஒழிவது எந்நாளோ? (தா.பா.1138)

- தூய குளிர்ந்த சந்திரஒளி கூட வெப்பம் தருவது போல் உணரச் செய்யும் அளவு பித்து ஏற்றி மயக்கம் செய்விக்கும் மகளிரது, காம மயக்கத்திலிருந்து விடுபடுவது எந்நாளோ?

காமபித்தை ஒழிப்பது எந்த நாள்? என்ற கேட்கிறார் தாயுமானவர். இதற்கு என்ன செய்ய வேண்டும்? காயகல்ப பயிற்சி வேண்டும் என்கிறது வேதாத்திரியம்.

"கறைபோக்கி வித்ததனை உறையச் செய்யும்
  காயகற்பப் பயிற்சியினால் உளநோய் நீங்கும்.
நிறைமனமும், ஈகையோடு, பொறுமை, கற்பு,
  நேர்நிறையும், மன்னிப்பும் இயல்பாய் ஓங்கும்.
இறையுணர்வு, விழிப்பு நிலை, அறிவுக் கூர்மை,
  இனியசொல், எண்ணத்தின் உறுதி. மேன்மை
மறைபொருளாம் மனம் உயிர்மெய் யுணர்வு கிட்டும்.
  மாதவமாய்க் பிறப்பிறப்புத் தொட அறுக்கும்." (ஞாக.பா.1510)

காயகற்பப் பயிற்சி செய்வதால் உடல் நோய்கள் மனநோய்கள் நீங்கும். காம உணர்வு கட்டுக்குள் இருக்கும். நல்ல எண்ணங்கள் மலரும்.

நோய் வராமல் காத்துக் கொள்ளவும், நோய்களின் தாக்குதலைத் தாங்கிக் கொள்ளும் சக்தியும் பெருகும்.

வித்துக் குழம்பில் உள்ள குற்றங்களைப் போக்கி வித்துக்குழம்பை இறுகி உறையச் செய்வதனால் உயிர்த்துகள் எண்ணிக்கை மிகுந்து சீவகாந்தத் திணிவு ஏற்படுவதால் மனநோய்களும் நீங்குகின்றன.

இருப்பதைக் கொண்டு திருப்தியாக வாழக்கூடிய மனநிறைவால், பிறருக்கு வழங்கும் ஈகைத் தன்மையும், சகிப்புத் தன்மையால் பொறுமையும், கற்புணர்வும், உயிர்களிடத்து நேர்நிறை உணர்வாகி சமநோக்கும், மன்னிக்கும் மனமும் இயல்பாகவே உயர்வடையும்.

அதனால் இறையுணர்வில் வாழும் விளைவறிந்த விழிப்பு நிலையில் செயல்படக்கூடிய அறிவுக்கூர்மையும், பேசும் வார்த்தை இனிமையாகவும், எண்ணத்தின் வலிமையும் மேன்மையடையும்.

அதன் காரணமாக மறை பொருட்களாக உள்ள மனம், உயிர். இறையுணர்வு ஆகியவற்றில் உண்மை உணர்வு கிட்டும்.

இதுவே மனிதனின் முழுமைப் பேறுமாகையால் பிறவித்தளை அறுபடும்.

கருமையக் களங்கங்கள் தூய்மை பெறாதவரை துன்பப் பிறவிகள் நீடித்துக் கொண்டு இருக்கும்.

கருமையம் தூய்மையடைவதால் இறக்க வேண்டியதுமில்லை. பிறக்க வேண்டியதுமில்லை. ஆனந்தமாக வாழலாம். (சித்தர்களின் காயகற்ப பயிற்சி, ஊரெங்கும் உள்ள மனவளக்கலை மன்றங்களில் சொல்லித் தரப்படுகிறது.)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

# 6 தன்முனைப்பும் எப்போது போகும்?

ஒரு சமயம் கிருஷ்ணன் துவாரகையில் இருந்த சமயம் காற்றில் நறுமணம் மிதந்து வருவதை உணர்ந்தார்.

அது சவுகந்தி என்ற மலரின் மணம். அவ்வகை மலர் குபேரனின் அழகாபுரி நந்தவனத்தில் மட்டுமே இருப்பது அவருக்குத் தெரியும். அந்த சூழ்நிலையில் அவருக்கு தன் வாகனமான கருடனின் மீதும், தன் ஆயுதமான சக்கரத்தின் மீதும் கவனம் சென்றது.

அவைகள் இரண்டும் நீண்டகாலமாகவே ஆணவம் கொண்டு ஆர்பாட்டம் செய்து வந்தன.

பரமாத்வையே ஏற்றிச்செல்வதால், தானே உயர்ந்தவன் என்று கருடன் நினைத்தது. அதைப்போலவே சக்ராயுதமும் தான் இல்லையென்றால் பரமாத்மாவே செயல்பட முடியாது.

என்னால்தான் பலரும் பரமாத்மாவைக் கண்டு அஞ்சுகிறார்கள் என்ற கர்வத்துடன் இருந்தது. கிருஷ்ணனுக்கு இவர்களின் தம்பட்டமும் கர்வமும் தெரிந்தே இருந்தது. தக்க சமயத்தில் அவர்களுக்கு பாடம் கற்பிக்க வேண்டி பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்தார்.

கிருஷ்ணன் கருடனை அழைத்து, கருடனே! குபேரனின் அழகாபுரி நந்தவனத்தில் சவுகந்திகா மலர் உள்ளது. அதனை இங்கு கொண்டு வா என்று கூறினார்.

அதைக்கேட்டதும், இவ்வளவுதானா, ஒரே நொடியில் பறித்து வருகிறேன், என்று ஆர்ப்பரித்த கருடன், வேகமாகப் பறந்து அழகாபுரியிலுள்ள நந்தவனத்திற்கு சென்றது.

அங்கு ஏராளமான மலர்கள் மலர்ந்து மணம் பரப்பிக் கொண்டிருந்தது. கருடன் அம்மலர்களை ஒவ்வொன்றாகப் பறித்துக் கொண்டிருந்தது.

அந்த சமயம் அனுமன் அங்கு வந்தான். யாரோ மலர்கள் கொய்வதைக் கண்டு, யார் மலர் பறிப்பது? என்ற அதட்டலுடன் கருடன் அருகில் வந்தான். கருடனும் அலட்சியமாக, என்னையே

தெரியவில்லையா உனக்கு? நான் என்ன சாதாரண ஆளா? நான்தான் கருடன். பரமாத்மாவின் வாகனம், என்றது.

கருடனா? யார் அந்த பரமாத்மா? எனக்கு பரமாத்மாவையே தெரியாதே! இது குபேரனின் தோட்டம். இங்கு யாரும் மலர்களை பறிக்கக்கூடாது. போ, போ என அனுமன் விரட்டினான்.

ஓ! என்னையே விரட்டுகிறாயா? பரமாத்மாதான் இந்த மலர்களைக் கொண்டு வரச் சொன்னார். அவரின் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது என் கடமை. பரமாத்மா துவாரகையில் தான் இருக்கிறார், என்றது கருடன்.

இதோ பார்! நீ யாராக இருந்தாலும் கவலையில்லை. மரியாதையாக வெளியே போ, என மேலும் அதட்டினான் அனுமன்.

என்னையே விரட்டுகிறாயா? என் வலிமையைப் பார் என்று கருடன் கோபத்துடன் அனுமனைத் தாக்க முயன்றது.

ஆனால் அனுமனோ, கருடனைப் பிடித்து இறுக்கி, தன் அக்குளுள் இறுக்கிக் கொண்டான். கருடன் எவ்வளவோ முயன்றும் தன்னை விடுவித்துக் கொள்ள இயலவில்லை.

அதற்கு மூச்சுத் திணறியது. என்னை விட்டுவிடு. பரமாத்மா சொன்னதால்தான் நான் வந்தேன் என்று கதறியது. சரி. உன்னை கிருஷ்ணன்தானே அனுப்பினார். அந்த கிருஷ்ணனையே கேட்கிறேன். வா போகலாம் என்று சொல்லியபடி துவாரகையை நோக்கி புறப்பட்டது.

அனுமன் துவாரகைக்குள் நுழையும்போது, மக்கள் அதன் தோற்றத்தைக் கண்டு பயந்தனர். அதனால் என்ன துன்பம் நேரிடுமோ என அஞ்சியவாறு கிருஷ்ணனிடம் சென்று சொல்லி முறையிட்டனர்.

கிருஷ்ணனுக்கு வருவது யாரென்று தெரியுமாதலால் மக்களிடம் அவர், கவலைப்படாதீர்கள். சக்கராயுதத்தை அனுப்பி அவனை கொன்று விடுகிறேன் என ஆறுதல் கூறினான்.

சக்ராயுதத்தை அழைத்து, நீ சென்று நகரில் புகுந்த குரங்கு முகமும், மனித உடலும் கொண்ட ஒருவன் ஊருக்குள் வருகிறான்.

அவன் கையில், கருடன் சிக்கித் தவிக்கிறான். அந்த வித்தியாசமான வடிவம் கொண்டவனை அழித்துவிட்டு கருடனை மீட்டு வா என்று ஆணையிட்டார்.

சக்கராயுதமும் மகா ஆவேசத்துடன் சுழன்று சென்றது. அனுமன் அருகில் சென்றதும், அதன் அக்குளில் கருடன் சிக்கி உயிர்போகும் நிலையில் இருப்பது கண்டு அதிர்ச்சியடைந்தது.

கருடனும், நல்ல நேரத்தில் வந்தாய். என்னை காப்பாற்று என சக்கராயுதத்தை கெஞ்சியது. ஆனால் அனுமன் மனதிற்குள் ராமநாமத்தை உச்சரித்துக் கொண்டே,

சீறிவரும் சக்கராயுதத்தை பிடித்து தன்னுடைய இன்னொரு அக்குளுள் இடுக்கி வைத்தது. சக்கராயுதமும் பிடியில் திணறியபடி, நான் கிருஷ்ணரின் ஆயுதம். என்னை விட்டுவிடு என கெஞ்சியது.

அட நீயும் கிருஷ்ணனின் ஆள்தானா? எனக்கு தெரிந்தது ராமன் மட்டுமே. அவரைவிட சக்தி வாய்ந்தவர் எவருமில்லை. நீங்கள் கூறும் அந்த கிருஷ்ணனை பார்க்கலாம் என்றபடி பிடியை மேலும் இறுக்கினான். அனுமனின் பிடியில் சிக்கிய சக்கராயுதமும், கருடனும் இதுவரை கொண்டிருந்த ஆணவத்தை விட்டன.

அனுமன் கிருஷ்ணன் முன் சென்றான். அவனுக்கு கிருஷ்ணன் யாரென்று தெரியவில்லை.

நீ யார், என்றான்.அதற்கு மேல் சோதிக்க விரும்பாத கிருஷ்ணன் அனுமனின் பார்வையில் ராமனாக காட்சி தந்தார். பிரபோ! தங்கள் தரிசனத்திற்காகத்தானே காத்து கிடந்தேன் என்று மகிழ்ச்சி பொங்க கூறி வணங்கினான் அனுமன்.

கிருஷ்ணனும் வாழ்த்தி, வாயு மைந்தா! உன் அக்குளுள் ஏதோ வைத்திருக்கிறாயே. அது என்ன? என்று கேட்டார். பிரபோ! தங்களுக்கு சவுகந்திகா மலர் வேண்டுமானால் என்னிடம் சொல்லியிருக்கலாமே!

உங்கள் வாகனம் கருடனாம்! தோட்டத்தில் புகுந்து நாசம் செய்து கொண்டிருந்தது. அதனால் அதனை பிடித்து வைத்துக் கொண்டேன்.

தங்களைக் கண்டு முறையிட வந்து கொண்டிருக்கும்போது என்னை வழிமறித்து வம்பு செய்தது இந்த சின்ன சக்கரம். அதனால் அதையும் பிடித்து அக்குளுள் வைத்தேன், என கூறினான்.

ஆஞ்சநேயா! பாவம் அவர்களை விட்டுவிடு என கிருஷ்ணன் கூற, அனுமன் அவர்களை அக்குளில் இருந்து விடுவித்தான்.

கருடனும் சக்கரமும் தலைகுனிந்தபடியே, மாதவா! எங்களை மன்னித்தருள்க. எங்கள் ஆணவம் அழிந்தது என வேண்டினர். கிருஷ்ணரும் புன்னகை புரிந்தார்.

ஆங்காரம் என்னும்மத யானைவா யில்கரும்பாய்
ஏங்காமல் எந்தைஅருள் எய்துநாள் எந்நாளோ? (தா.பா.1150)

- மதங்கொண்ட யானையின் வாயில் அகப்பட்ட கரும்பு போல ஆங்காரம் எனப்படும் தன்முனைப்பு கொண்டு,
- துன்புறும் உயிருக்கு, எம் தந்தையின் திருவருள் பதிவது எப்பொழுதோ?

"தன்முனைப்பு கொண்டு, துன்புறும் உயிருக்கு தன்முனைப்பு போக்கும் வழி என்ன? வழி காட்டுகிறது வேதாத்திரியம்.

"இறைநிலையே பேரறிவாய் எல்லாப் பொருட்களிலும்,
இடையற்றும் உட்புறமும் இணைப்பியக்க மாயுள. அம்
மறைபொருளே அணுமுதலாய், அண்டபிண்டம் அனைத்தாய்.
மாபெரிய பேரண்டமாய் மலர்ந்து, அது அதனில்
நிறையறிவாய் ஒழுங்கமைப்பாய் நெறியோடு இயங்கும்,
நேர்அறியச் சீர் அறிவைப் பெற்றவனே மனிதன்,
முறையாக அகத்தவத்தால் அறிவறிந்த பேற்றில்,
முழுமுதற் பொருள் விளங்கும், தன்முனைப்பும் போகும்."
(ஞாக.பா.1588)

இறைநிலையானது பேரறிவு ஆகும். அந்தப் பேரறிவானது, தோற்றப் பொருட்கள் அனைத்திலும் வேறுபாடு இல்லாமலும், உட்புறமாகவும் இருந்து எல்லாவற்றையும் இணைத்துக் கொண்டுள்ள இயக்கமாகவும் உள்ளது.

இருக்கிறது என்ற சொல்லத்தான், உணரத்தான் முடியும். எடுத்துக்காட்ட முடியாது, புலன்களுக்கு அப்பாற்பட்டவை மறைபொருள் ஆகும்.

மறைவாக இருப்பதால், மறைபொருள் எனப்படும். மறைபொருளே இயக்கமாகும்போது அணுவாகி, அணுவின் கூட்டுச் சேர்க்கையால் பெரும் பெரும் கோள்களாகி, சடப்பொருள், சீவன் என்று அனைத்திலும் நிறை அறிவாகவும், இப்படித்தான் இயங்க வேண்டும் என்ற இயக்க ஒழுங்கில் நெறியோடு செயல்படுககின்றது.

இவற்றை எல்லாம் அறியக்கூடியதான, சிறப்பான ஆறாவது அறிவைப் பெற்றவன்தான் மனிதன்.

அகத்தவத்தை முறையோடு இயற்றுவதனால், அறிவை அறியும் பேறு கிட்டும். அந்த அறிவே முழுமுதற் பொருளான இறைநிலை என்பதும் அறிவிற்கு விளக்கமாகும்.

அதனால் மனிதனின் தன்முனைப்பு ஒழிந்துவிடும். தன்முனைப்பு நிங்கி ஆனந்தமாக வாழ்வோமாக.

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## 7 உன்னை அறிந்தால்...நீ உன்னை அறிந்தால்

வேதத்தில் ஒரு கதை உண்டு. பத்து நண்பர்கள் ஒரு ஆற்றைக் கடந்து போகின்றனர்.

ஆற்றைக் கடந்ததும், அனைவரும் வந்து விட்டோமோ என்று ஒவ்வொரும் எண்ணிப் பார்க்கின்றனர். ஒன்பது நபர்களே இருக்கின்றனர்.

ஒவ்வொருவரும் தன்னை விட்டுவிட்டு, மற்றவர்களை எண்ணுகின்றனர். பத்தாவது நபரைத் தேடி அலைகின்றனர்.

அது போலத்தான் நம்மை தேடாமல் அறியாமல், அதை வெளியில் தேடிக் கொண்டிருக்கிறோம்.

நம்மை நாம் தேடுவோம். தன்னை அறியும் இரகசியத்தை புரிந்து கொள்வோம்.

உன்னை அறிந்தால்...நீ உன்னை அறிந்தால்
உலகத்தில் போராடலாம்
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்
தலை வணங்காமல் நீ வாழலாம்" (திரைப்பாடல்)

வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை
நான் கெடுத்துத் தேடாமல் நன்கு அளிவது எந்நாளோ? (தா.பா.1176)

- வான் வெளியில் இருந்து கொண்டே, "வளர்வதைக் காண வில்லை" என்று கூறித் தேடும் அறிவு கெட்டவர்களைப் போல
- எம்மை நானே தேடாமல்,
- நன்கறிவது எப்பொழுதோ?

## தன்னையறிதல் – வேதாத்திரியம்

தன்னிலை அறிவறிய அகநோக்கு நிற்கின்ற
 தவமுறை பயில வேண்டும்.
அந்நிலை 1) குருநாடி 2) மூல ஆதார நிலை,
 3) அசைவிலா துரியநிலை 4) நேர்
முன்னிலை இலா துரிய அதீதநிலை, 5) அறுகுணம்
 முனையாது காத்திடு நிலை.
இநநிலைகள் ஐந்தையும் குருமூலம் அறியலாம்.

ஏற்றவர் கரு தவத்தால்.” (ஞாக.பா.1461)

சீடன் தன்குருவைப் பார்த்தான்........

“குருவே! தங்களைப் போல வாழ்வில் வெற்றிபெற நான் விரும்புகிறேன். அதற்கு என்ன செய்ய வேண்டும்?” என்று கேட்டான் சீடன்.

“நான் வாழ்வில் வெற்றி பெற்றேன் என்று எப்படி கூறுகிறாய்?” என்று கேட்டார் குரு.

“ஒரு பெரிய மடலாயத்தை நிர்வகிக்கின்றீர்கள், ஞானம் பெற்று பல நூறு சிடர்களுக்கு ஞானம் போதிக்கும் ஜென் குருவாக இருக்கிறீர்கள். இதை வைத்துக் கண்டு பிடித்தேன்!”

“இதுதான் வாழ்வின் வெற்றியா?”
“அப்படித்தான் நினைக்கிறேன்!”
“முதலில் நீ யார்?”
சீடன் யோசித்தான்.

குரு எதிர்பார்க்கும் பதிலைச் சொல்ல வேண்டும் என்று முடிவு செய்தான்.
“முதலில் நான் குழந்தை!” என்றான்.
“அடுத்து?”
“சிறுவன்!”
“அடுத்து?”
“வாலிபன்!”
“அடுத்து?”
“தற்போது தங்களின் சீடன்!”
“அடுத்து?”

சீடன் மீண்டும் யோசித்தான்.
“தங்களைப் போல நானும் ஒரு குரு!”
“அடுத்து?”
சீடன் யோசித்தான்.

“தாங்கள் என்னவாக ஆவிர்களோ அந்த நிலை எனக்கும் வந்து சேரும்!”
“ஊறீம்! உனக்கு இன்னும் ஞானம் வரவில்லை. நீ சொன்ன பதில்களில் ஒன்றுகூட என் கேள்விக்குப் பொருந்தாது!”

“எப்படிக் குருவே?”
“பார்! நான் குரு என்று ஒருநாளும் என்னைச் சொல்லிக் கொண்டதில்லை. மற்றவர்கள்தான் என்னை குரு என்கிறார்கள்.

ஆனால் என்னை ஒரு மனிதன் என்று நான் சொல்லிக் கொள்கிறேன். ஆனால் மற்றவர்கள் அதைச் சொல்லவில்லை. என்னை மற்றவர் மனிதன் என்று எப்போது கூறுகிறார்களோ அப்போதுதான் நான் வெற்றியாளனாவேன்.

மனிதன் குருவாகிறான். குரு மனிதனாவதில்லை!”
“குரு மனிதனாக என்ன செய்ய வேண்டும்?”
“மனிதனாகவே இருக்க வேண்டும். மனிதனுக்கு மிஞ்சிய உயர்நிலை இல்லை. ‘நீ யார்?’ என்ற எனது கேள்விக்கு ‘நான் மனிதன்’ என்று சொல்லியிருந்தால் நீதான்வெற்றியாளன்.

‘நான் குரு’ என்ற சொல்வது அகந்தை. நான் மனிதன் என்று சொல்வது உண்மை. இப்போது சொல் யார் வெற்றியாளன்? குருவா? மனிதனா?”

சீடன் யோசித்தான்.

“மனிதன்தான்!” “நீ, நீ விரும்பியதுபோல் அவனாகவே இரு.

தாயுமானவர் சொல்லியதைப்போல் உணர்வாக இரு!”
புதிய ஞானத்தால் சீடன்தெளிவு பெற்றான்.

நிலம் முதலாகச் சொல்லப்பட்ட பூதம் நீ அல்லை. நினைத்துப் பார்க்க, அறிவுக் கருவிகளும், தொழிற் கருவிகளும், அகக் கருவிகளும் நீ அல்லை. ஆராய்ந்து பார், உணர்வே நீ என்று சொன்னான்.

தாயுமானவர் பாடுகிறார்.

பார்ஆதி பூதம் நீ அல்லை-உன்னிப்
பார் இந்திரியம் கரணம்நீ அல்லை
ஆராய் உணர்வுநீ என்றான்-ஐயன்
அன்பாய் உரைத்தசொல் ஆனந்தம் தோழி" (தா.பா.1431)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## 8. ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ?

பிறப்பு இறப்பு தரும் ஈனந்தரும் நாட்டில் இருந்து விடுதலைப் பெற என்ன செய்ய வேண்டும்?

பிறப்பு இறப்பு இரண்டையும் வேரொடு அறுக்க என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் வழி காட்டுகிறது.

பிறப்பு இறப்பு எனும் கடலை நீந்த வென்றால்,
பெருவிழிப்பாய் இருவழியில் வெற்றிவேண்டும்.
பிறப்புஎழாமல் புதிதாய்க் கருவின் மூலம்
பேணிப் பாலுறவு அறவே தடுக்க வேண்டும்.
பிறப்பதனைப் பெருக்குகின்ற தன்முனைப்பு,
பெரும்பாவப் பதிவுகளும் பற்றும் போக்கி,
பிறப்பறுக்கும் அகத்தவமும் அறமும் ஆற்றி,
பேரறிவாய் அறிவறிந்து நிலைக்க வேண்டும்." (ஞாக.பா.1314)

ஒரு மனிதன் பெற்றோர் விந்து நாதத்தில் உள்ள தரத்தை சஞ்சித கர்ம வினையாகப் பெற்று. அந்தத் தரத்தை அடிப்படையாகக் கொண்டு உடலை, மனதை இயக்கி பிராரப்த கர்ம வினையை சேர்த்துக் கொள்கிறான்.

அதுவே அவனது ஆன்மாவில், அறிவின் தரமாகியது. ஆன்மக் களங்கங்கள் தூய்மை பெறும் வரை பிறப்பு இறப்பும் தொடர்ந்து வந்து கொண்டே தான் இருக்கும்.

கடலுக்கு எல்லையைக் காண முடியாதது போல் பிறப்பு இறப்புத் தொடருக்கும் எல்லை இல்லை.

பிறப்பு இறப்பு என்னும் வாழ்க்கைக் கடலைக் கடந்து பிறவியின் நோக்கமாகிய இறையனுபூதி நிலை கிட்ட வேண்டுமானால், இரு வகைகளில் விழிப்பு நிலையில் செயல்பட்டால் வெற்றி கிட்டும்.

களங்கமான பின்பிறவிகளை உருவாக்கும் ஆண் பெண் பாலுறவை அறவே தடுத்து புதிதாக் கருவின் மூலம் பிறப்பு ஏற்படாமல் காத்துக் கொள்வது ஒன்று.

மனிதனின் தன் முனைப்பால் வரும் பாவப் பதிவுகளும், உலகியல் பற்றும் ஆன்மாவைக் களங்கப்படுத்தி பிறப்பைப் பெருக்குகின்றது.

அதனைத் தவிர்ப்பதற்கு அகத்தவத்தின் மூலம் மனதை உயிரில் அடக்கியும் ஒடுக்கியும் அறிவை அறிந்து, அறநெறியில் வாழ்ந்து பேரறிவு நிலையில் நிலைப்பது மற்றொன்று ஆகும்.

நாமும் பிறப்பற்ற நிலை பெறுமாறு ஆனந்தமாக வாழ்வோமாக!

ஈனம் தரும்நாடு இதுநமக்கு வேண்டாஎன்று
ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ? (தா.பா.1177)

- இழிவாகிய பிறப்பினை மீண்டும் மீண்டும் தரும் இந்த நாடு எனக்கு வேண்டாம் என்று,
- பேரின்பம் தரும் நாட்டில் அவதரிப்பது எப்பொழுதோ?

ஆனந்தநாடு என்ற வீடு பேற்று நெறியை அறிவது எப்படி என கேட்கிறார். வேதாத்திரியம் விடை தருகிறது.

"வெட்டவெளி பிரபஞ்சப் பொருள்கட் கெல்லாம்
வீடாகும். விண்கடந்த வானறிந்தால்,
வெட்டவெளி அணுஅறிவு ஒன்றாய்ப் போகும்.
வீடுபேறு எனும் உணர்ந்த பதமும் ஈதே!" (ஞாக.பா.1848)

நாம் நில உலகில் வாழ்ந்து கொண்டுள்ளோம். உலகமோ சூரியக் குடும்பத்தில் மூன்றாவது வட்டப் பாதையிலே தற்சுழல் இயக்கத்துடன் சூரியனைச் சுற்றி வருகிறது.

சூரியக் குடும்பமோ பால்வெளி மண்டலத்தில் பலகோடி சூரியக் குடும்பங்களிலே ஒன்றாக சுழன்று கொண்டுள்ளது.

பால்வெளி மண்டலமோ, எண்ணிலடங்காத மண்டலங்களை உள்ளடக்கிக் கொண்டு சுழன்று கொண்டுள்ள பிரபஞ்த்தின் ஒரு பகுதியாக சுழன்று கொண்டுள்ளது.

பிரபஞ்சத்திற்கு அப்பாலும் சுற்றிலும் சூழ்ந்தும் உள்ள சுத்தவெளி என்னும் வெட்டவெளியின் ஒரு பகுதியில் பிரபஞ்சமே சுழன்று கொண்டுள்ளது.

ஆகவே பிரபஞ்சத்திலே நாம் காணும் சடப்பொருள், சீவன் ஆகிய அனைத்துத் தோற்றப் பொருட்களுக்கும் இடமாக வீடாக இருப்பது சுத்தவெளியாகும்.

உடல் பற்று, உலகியல் பற்றுக்களிலிருந்து விடுதலை பெற்றால் வீடுபேறு என்னும் உயர்ந்த நிலையை மனிதன் பெறலாம்.

மனம்தான் மனிதனாக இயங்கிக் கொண்டுள்ளது. அந்த மனதை, மனத்திற்கு மூலமான விண் என்னும் உயிரில் ஒடுக்கிப் பழகினால், மன அலை நின்று நிலைக்கு வரும்.

மனதின் அடித்தளமாகிய அறிவில் நிலைத்தால் அறிவு விரிந்து. பிரபஞ்சத்தைக் கடந்து அப்பாலாக உள்ள சுத்தவெளியில் கலப்புற்று விடும்.


மனிதனின் சிற்றறிவைப் பேரறிவை உள்ளடக்கமாகக் கொண்ட சுத்தவெளியில் கலப்புறச் செய்வதே வீடுபேறு என்ற உயர்ந்த பதம் என்னும் பக்குவம் ஆகும்.

வீடுபேறு என்னும் பெரும் பதம் அடைந்தவர்கள் தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கக் கூடியவர்கள் ஆவர்.

நாமும் அவர்களைப் போல் வாழ்ந்து மற்றவர்களுக்கும் தொண்டாற்றி- இன்புற்று -ஆனந்தமாக வாழ்வோமாக!

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம்.

ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
கருணாகரக கடவுள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
மௌனகுரு
வணக்கம்...
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.


வேதாத்திரியப்
பார்வையில்
தாயுமானவரின்
சின்மயானந்தகுரு...
அருள்நிதி மன்னார்குடி
பானுகுமார்.


குருவே துணை
வாழ்க வையகம் வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
எங்கும் நிறைகின்ற பொருள்
அருள்நிதி
மன்னார்குடி
பானுகுமார்.

ц37

# 9. மெய்ஞ்ஞான மெய்விளக்கு

**அ**து ஒரு பெரிய குருகுலம். பல ஜென் துறவிகள் அங்கு தங்கியிருந்து கல்வி பயின்று வந்தனர்.

குருகுலத்தில் இருந்த தலைமை குருவுக்கு மிகவும் வயதாகி விட்டது. அதனால் அவர் படுத்த படுக்கையாக இருந்தார்.

அவரிடம் தலைமை சீடன் ஒருவர் இருந்தார். ஒரு நாள் தனது கடமைகள் அனைத்தையும் முடித்துவிட்டு, அமைதியாக அமர்ந் திருந்தார், தலைமை சீடன்.

அப்போது தலைமை குரு, அவரை அழைப்பதாக தகவல் வந்தது. இதையடுத்து அவர், குருவின் அறையை நோக்கிச் சென்றார்.

அறைக்குள் குளிரை தாங்க முடியாமல், போர்வையால் போர்த்திய நிலையிலும் நடுங்கியபடி அமர்ந்திருந்தார் குரு. அவருக்கு எதிரில் விறகுகள் குவித்து, நெருப்பு எரிந்து கொண்டிருந்தது.


தனது சீடனைப் பார்த்ததும், ‘உட்கார்’ என்று சைகை காட்டினார், குரு. தொடர்ந்து அவரும், படுக்கையில் இருந்து எழுந்து அமர்ந்தார்.

குருவானவர் பேச்சைத் தொடர்ந்தார். ‘என்னை வயோதிகம் வாட்டி எடுக்கிறது. உடலில் தள்ளாமை ஏற்பட்டுவிட்டது. என்னுடைய சீடர்களிலேயே நீ தான் முதன்மையானவன். எனவே எனக்குப் பிறகு, இந்த குருகுலத்தை ஏற்று நடத்தும் பொறுப்பை நீதான் ஏற்றுக்கொள்ள வேண்டும்’ என்றார் தலைமை குரு.

அதை ஏற்றுக்கொள்வது போல், தலைமை சீடன் அமைதியாக தலையாட்டினார்.
இதையடுத்து குரு தன் அருகில் இருந்த புத்தகத்தை எடுத்து சீடனிடம் நீட்டினார்.

‘இதை வாங்கிக்கொள். இது ஒரு அரிய பொக்கிஷம். உனக்கு இந்த

புத்தகம் நல்வழியைக் காட்டும் என்று கூறி அதை வழங்கினார்.



ஆனால் தலைமை சீடனோ, அதை வாங்க மறுத்தார். ‘எனக்கு இது வேண்டாம் குருவே’.

தன் சீடன் இந்த புத்தகத்தின் வலிமை தெரியாமல் மறுக்கிறான் என்று நினைத்த குரு, மீண்டும் அவனிடம் புத்தகத்தைப் பெற்றுக்கொள்ளும்படி வலியுறுத்தினார்.

அதற்கு தலைமை சீடன், ‘இல்லை குருவே.. எனக்கு தேவையானதையெல்லாம் தாங்கள் எப்போதோ கற்பித்து விட்டீர்கள். இது எதற்கு? என்று கூறி மீண்டும் மறுத்தார்.

ஆனால் குரு, ‘அப்படிச் சொல்லாதே. இது வேத நூல். பல தலைமுறைகளாக இந்த புத்தகம், நம்முடைய மடத்தில் பாதுகாக்கப்பட்டு வருகிறது என்றார்.

தலைமை சீடன் அப்போதும் குரு கொடுத்த புத்தகத்தை ஏற்கவில்லை.

உடனே குரு, தன்னுடைய சீடனைப் பார்த்து கேட்டார். ‘பசி வந்தால் உணவுக்கு என்ன செய்வாய்?’.

‘பாத்திரத்தை எடுத்துக் கொண்டு யாசகம் பெற புறப்படுவேன் என்றார் தலைமை சீடன்.

‘சரி.. ஒருவர் பிட்சையிடும்போது என்ன வேண்டும் என்று கேட்பாய்? என்று அடுத்த கேள்வியை முன் வைத்தார் குரு.

தலைமை சீடனோ, ‘எதுவும் கேட்கமாட்டேன். அவர்கள் இடுவதை

பெற்றுக் கொள்வேன்’ என்றார்.

‘அப்படி உன் பாத்திரத்தில் இடப்பட்ட பிட்சையாக இதை வைத்துக் கொள்’ என்று கூறி புத்தகத்தை நீட்டினார், அந்த மடத்தின் குரு.

மவுனமாக அந்த புத்தகத்தைப் பெற்றுக்கொண்ட தலைமை சீடன், அடுத்த நொடியே தன் கையில் இருந்த புத்தகத்தை அருகில் எரிந்து கொண்டிருந்த நெருப்பில் தூக்கிப் போட்டார்.

பதறிப்போனார் குரு. ‘அடப்பாவி.. என்ன காரியம் செய்து விட்டாய்?’ என்று அலறினார்.

இப்போதும் அமைதியாக பதிலளித்தார் தலைமை சீடன். ‘பிட்சை அளித்த யாருமே, தாங்கள் போட்ட பிச்சை என்ன ஆனது என்று பார்ப்பதில்லை குருவே. அதுவும் இல்லாமல் ஞானம் என்பதே நெருப்புதானே. நெருப்பு நெருப்புடன் சேர்ந்துவிட்டது. வேதம் என்பது வெறும் எழுத்துக்கள். இவற்றிலா இருக்கிறது ஞானம்?’ என்றார் தலைமை சீடன்.

தன்னுடைய சீடன் தன்னை விடவும், பெரும் ஞானம் அடைந்தவன் என்பதை அந்த வார்த்தைகளில் இருந்து உணர்ந்து கொண்டார் குரு.

கைவிளக்கின் பின்னேபோய்க் காண்பார்போல் மெய்ஞ்ஞான
மெய்விளக்கின் பின்னேபோய் மெய்காண்பது எந்நாளோ?
(தா.பா.1195)

- கைவிளக்கு கொண்டு உலகியல் பொருள்களைக் காண்பது போல
- மெய்ஞ்ஞானமாகிய மெய்விளக்கினைக் கொண்டு,
- இறைவனது திருவடியைக் காண்பது எந்நாளோ?

## விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் – வேதாத்திரியம்

உருவம், ஒலி, ஒளி, சுவை, மணம் எனும் ஐந்து விளைவுகளுக்கும் மூலமானதும், மெய்ப்பொருளானதும், காலம், தூரம், பருமன், வேகம் எனும் கணிப்புக்கு அப்பாற்பட்டதும் ஆகிய மெய்ப்பொருளினைப் பற்றியும், ஐயுணர்வுகளாகவும் சிந்தனை ஆற்றலாகவும் உள்ள அறிவைப் பற்றியும் உணர்ந்து கொள்ளும் தெளிவு மெய்ஞ்ஞானம்.

இயக்கத்தைக் கண்டது விஞ்ஞானம். இயக்க மூலத்தை உணர்ந்தது மெய்ஞ்ஞானம்.

உடலை வளர்ப்பதும் அதை அழகுபடுத்துவதும் விஞ்ஞானம். உள்ளத்தை மேன்மையாக்குவதும், தூய்மையாக்குவதும் மெய்ஞ்ஞானம்.

வாழ்வில் சிறப்பளிப்பது விஞ்ஞானம். வாழ்வில் அமைதி தருவது மெய்ஞ்ஞானம். இயங்கி அறிவது விஞ்ஞானம்.

நிலைத்து உணர்வது மெய்ஞ்ஞானம். வாழ்வின் முன்னேற்றம் "விஞ்ஞானம்" வாழ்வின் சீர்திருத்தம் "மெய்ஞ்ஞானம்".

.

வாழ்வை வளப்படுத்தும் ஒரு உயர்நிதி விஞ்ஞானம். அந்த நிதியைப் பாதுகாக்கும் பெட்டகம் மெய்ஞ்ஞானம்.

துணைக்கருவிகளைக் கொண்டு உடல் கருவிகளை ஆற்றல்களைப் பெருக்கிவருகிறது விஞ்ஞானம். உடற்கருவிகளை திறமையோடு ஆற்ற அறிவை முழுமையாக்குகிறது மெய்ஞ்ஞானம்.

மனிதனுக்கு களிப்பூட்டவல்லது விஞ்ஞானம். அக்களிப்பு சலிப்பாக மாறாமல் அளவு கட்டிக்காவல் புரியவள்ளது மெய்ஞ்ஞானம்.

மெய்ஞ்ஞானத்தோடு இணைந்த விஞ்ஞானம் வாழ்வின் நலம்காக்கும். மெய்ஞ்ஞானத்தைப் புறக்கணித்த விஞ்ஞானம் வாழ்வின் வளமழிக்கும்.

மறைபொருள் விளக்கம்தான் மெய்ஞ்ஞானம். உருப்பொருள் விளக்கம் தான் விஞ்ஞானம். அறிவைப் பற்றி, உயிரைப் பற்றி,

உயிருக்கும் மூலமெய்ப்பொருளைப் பற்றி அறிந்து கொள்வது மெய்ஞ்ஞானம். உடலைப் பற்றி, உலகைப் பற்றி அறிந்து கொள்வது விஞ்ஞானம். அறிவின் சிறப்பு மெய்ஞ்ஞானம்.

"விஞ்ஞானம் விளக்கைப் போல் இயற்கையில் நிகழ்ந்திடும்
விந்தைகளை மக்களுக்கு வெளிப்படுத்தும் ஒளியென்றால்;
மெய்ஞ்ஞானம் சூரியன் போல் எங்கும் எக்காலத்தும்
மேல் நிலையை அறிவெய்த மிகச் சிறந்த ஒளியாகும்".

"அஞ்ஞானம் அறிவினது ஆரம்ப நிலையாகும்.
விஞ்ஞானமோ அறிவின் வேகநிலை,
மெய்ஞ்ஞானம் அறிவதனின் பூரணமாம்,
இஞ்ஞானம் மூன்றும் இயற்கையின் எண்ண நிலை".

.

"விஞ்ஞானம் சிறப்புற்று விண் வெளியுணரப் பெற்றால்
அஞ்ஞானம் மறைந்து விடும் அன்பும் அருளும் பொங்கி
மெய்ஞ்ஞானம் ஒளி வீசும் மெய் உயிர் அறிவறிவு
இஞ்ஞால முழுமைக்கும் ஏற்றமுறும் இன்பமே".

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## 10. வஞ்சக் காரர்கள் கை கோவாமல்

சகுனி...! இன்றும் தந்திரமாக... மறைந்திருந்து கோழை போல தாக்கும் நபர்களை, வஞ்சனை மனம் கொண்டவர்கள உடன் இருந்து துரோகம் செய்வோரை சகுனி என்று கூறும் வழக்கம் நம் மத்தியில் இருக்கிறது.

சகுனி மகாபாரதத்தின் முக்கியமான கதாப்பாத்திரம். ஒருவேளை சகுனி இல்லாமல் இருந்திருந்தால் குருஷேத்திர போரே மூண்டிருக்காது.

ஏன் பாண்டவர்கள் சூது விளையாடி இருக்க மாட்டார்கள். அவர்களே ஆட்சி செய்து வந்திருக்கலாம். துரியோதனன் மனதில் வேறு யாரும் அவ்வளவு வஞ்சனை எண்ணத்தை விதைத்திருக்க மாட்டார்கள்.

சகுனி ஒரு மாஸ்டர்மைண்ட் ஆப் மகாபாரதம் என்று தான் கூற வேண்டும்.

பீஷ்மர் செய்த ஒரு தவறு, அவரையே அநீதி பக்கம் நிறுத்தி நீதிக்கு எதிராக போரிட வைத்தது. இவை அனைத்துக்கும் ஒருவகையில் சகுனி தான் காரணம்.

மகன்கள்! சகுனிக்கு இரண்டு மகன்கள் இருந்தனர். ஒருவர் பெயர் உளுக்கா, மற்றொருவர் பெயர் விருக்சூரா. இவரது மகன்கள் பலமுறை ஹஸ்தினாபுரத்தில் இருந்து வெளியேறி தங்களுடன் நிம்மதியான வாழ்க்கை வாழ அழைப்பு விடுத்த போதும். பீஷ்மர் மீது இருந்த கடுங்கோபம் மற்றும் தீராத பகை வஞ்சனை காரணமாக மகன்களின் அழைப்பை தவிர்த்து வந்தார் சகுனி.

சகுனிக்கு நூறு மைத்துனர்கள் (கௌரவர்கள்) என்று அனைவரும் அறிவார்கள். ஆனால், சகுனிக்கு நூறு உடன் பிறந்தவர்களும் இருந்தனர். 99 சகோதரர்கள் மற்றும் ஒரு சகோதரி உட்பட சகுனியுடன் பிறந்தவர்கள் நூறு பேர். அனைவருக்கும் இளையவர் சகுனி.

அதே போல அனைவரை விடவும் மிகவும் புத்தி கூர்மை கொண்டிருந்தவரும் சகுனி தான். பீஷ்மர் மீது பகை! சகுனிக்கு பாண்டவர்கள் மீது பெரிதாக எந்த பகையும் இல்லை. மாறாக மீஷ்மர் மீது தான் பெரும் பகை கொண்டிருந்தார்.

தனது ஒரே சகோதரியை கண் பார்வை இல்லாத ஒருவருக்கு



திருமணம் செய்து வைத்தது மட்டுமின்றி, தனது ஒட்டுமொத்த குடும்பத்தையும் தன் கண் முன் பட்டினியில் சாக காரணாமாக இருந்த பீஷ்மர் மீது பெரும் பகை, விரோத குணம் வஞ்சனை கொண்டிருந்தார் சகுனி.

அதனாலயே அவரது குலத்தை அழிக்க வேண்டும் என்றும் கருதினாராம் சகுனி.

மாயாவி! மாய பிம்பங்கள் உண்டாக்குவதில் சகுனி வல்லவர் என்றும் கூறப்படுகிறது. பகடை விளையாடுவதில் சகுனி ஒரு கைத்தேர்ந்த வல்லவர்.

மகாபாரதத்தில் சகுனி விளையாடிய தாயம் பெரும் திருப்பத்தை உண்டாக்கியது. யுதிஷ்டிரர் போட்டியில் சூது விளையாட்டில் தோல்வி அடைய சகுனியின் மாய தந்திரங்கள் முக்கிய காரணமாக அமைந்தது.

எலும்புகளால் சகுனி விளையாட பயன்படுத்தும் பகடை அவரது தந்தையின் எலும்பு கூட்டில் இருந்து உருவாக்கியது.

இதனால் சகுனி அந்த பகடையை உருட்டும் போதெல்லாம்... அவருக்கு வேண்டிய எண்கள் விழும் என்று மகாபாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

தான் சாகும் தருவாயில் சகுனிக்கு தாயம் மீதிருந்த விருப்பம் அறிந்து, தனது எலும்புகள் மூலம் பகடை செய்துக் கொள்,

அதில் என் தீராத ஆத்திரம், கோபம் வஞ்சனை நிறைந்திருக்கும். நீ நினைக்கும் போது, உன் விருப்பத்திற்கு ஏற்ற எண்களே விழும் என்று கூறி இருந்தார்

சகுனியின் தந்தை சுபலன். சுபலன் குடும்பத்தில் கடைசி பிள்ளை சகுனி. பீஷ்மர் இவரது ஒட்டுமொத்த குடும்பத்தை சிறையில் அடைத்து ஒரு நாளுக்கு ஒரு கைப்பிடி உணவு மட்டும் அளித்து வந்தார்.

அனைவரும் இறந்துவிட்டால் யாராலும் பீஷ்மரை பழிவாங்க முடியாது என்று எண்ணிய சுபலன். தங்களில் ஒருவனை தேர்வு செய்வது அவனுக்கு சோறுடன் பகையும் ஊட்டி பழிவாங்க தயார் செய்ய திட்டமிட்டார்.

அதன்படி, சகுனி தேர்வானார். அனைவரும் சகுனி கண்முன்னே மடிந்தனர்.

கடைசியாக சுவலன் இறக்கும் முன்னர் சகுனியின் கணுக்காலை உடைத்து நொண்டி ஆக்கினார்.

ஒவ்வொரு முறை நீ நொண்டி நடக்கும் போதும் கௌரவர்கள் மீதான பகை மறக்க கூடாது என்று கூறி இறந்தார் சு  பலன்.

சகாதேவன்! சகுனியை குருஷேத்திரம் போரின் 18 வது நாளில் சகாதேவன் கொன்றார்.

சூது விளையாட்டில் சொத்துகளை இழந்து கடைசியாக தங்கள் மனைவியை வைத்து விளையாடினார்கள் பாண்டவர்கள்.

துரௌபதியையும் சூதில் தோற்ற பாண்டவர்கள் அவமானத்திற்கு ஆளாகினார்கள்.

அந்த அரங்கில் வைத்தே சகுனியின் திட்டத்தால் திரௌபதி மானபங்கதிற்கு ஆளாகி  னாள். இதற்கு பழி தீர்க்கவே சகுனியை தன் கையால் கொல்வேன் என்று சப்தம் ஏற்று போரில் கொன்றார் சகாதேவன்.

இப்போது நடந்துக் கொண்டிருப்பது கலியுகம், இதற்கு முன்னர் நடந்து முடிந்தது துவாபர யுகம்.

இந்த யுகமானது மக்கள் உறவுகள் சார்ந்த உணர்ச்சிகளை இழப்பார்கள் என்று கூறப்படுகிறது.

உடன் பிறந்தவர்களே துரோகம் விளைவிப்பது போன்றதை இது குறிக்கிறது.

குருஷேத்திர போரில் கௌரவர்கள், பாண்டவர்களே அடித்துக் கொண்டனர். இந்த போருக்கு வினையாக கருதப்படுபவர் சகுனி. சகுனியை கோழை என்று கூறுவார்கள்.

தனது எதிரிகளை வீழ்த்த வேண்டும் என்றே அனைவரும் எண்ணுவார்கள். ஆனால், சகுனி தன் எதிரியாக கருதிய குலத்தை உடன் இருந்தே அழிக்க எண்ணினார்.

கல்குணத்தைப் போன்ற வஞ்சக் காரர்கள் கை கோவாமல்
நல்குணத்தார் கைகோத்து நான்திரிவது எந்நாளோ? (தா.பா.1243)

- கல் போன்ற மனமுடன், வஞ்சனை பொருந்திய குணக் கேடர்களோடு சேராது.
- நல்ல குணமுடையோருடன் சேர்ந்து, நான் திரியும் நாள் எந்நாளோ?

வஞ்சனையை உளமார்ந்த மன்னிப்பு மூலம் மாற்றலாமே என்கிறது வேதாத்திரியம்.

விருப்பம் சினம் வஞ்சம்மதம் பால்கவர்ச்சி
 விளைவறியா கடும்பற்று என்ற ஆறும்,
உருக் குலைந்து நிறைந்த மனம். சகிப்புத்தன்மை.
 உளமார்ந்த மன்னிப்பு, மெய் உணர்வு.
கருத்துடைய கற்பு நெறி, ஈகை என்ற
 களங்கமிலா நற்குணங்களாக மாற்றும்,
பொருத்தமுள உளப்பயிற்சி முறை பயின்று.
 புகழ் இன்பம் அமைதி பெற வாரீர்! வாரீர்!" (ஞாக.பா.1592)

தாயுமானவர் வேதாத்திரிய சிந்தனைகளை ஏற்போம். ஆனந்தமாக வாழ்வோம். ஆனந்தம்! ஆனந்தம்! ஆனந்தமே! வாழத்தெரிந்திடில் ஆனந்தமே!!! வாழ்க வளமுடன்.

## வேதாத்திரியப் பார்வையில்

# தாயுமானவரின் எந்நாள் கண்ணி பாகம்1

YOUTUBE LINKS

1. கடவுளை காணும் நாள் எந்நாளோ? https://youtu.be/HZQ6xWTN8VU
2. குருவைச் சாரும் நாள், எந்நாளோ? https://youtu.be/7onYVDaX49k
3. உடல் பற்று அறுவது எந்நாளோ? https://youtu.be/SO62tt6IUjo
4. நான் என்ற தன்முனைப்பு https://youtu.be/HL5zKy5Ierk
5. மடவார் மயக்கு ஒழிவது எந்நாளோ? https://youtu.be/K95OAvay8I4
6. தன்முனைப்பு எப்போது போகும்? https://youtu.be/TbzVwJmxlKk
7. உன்னை அறிந்தால்...நீ உன்னை அறிந்தால் https://youtu.be/qcw3gACoPso
8. ஆனந்த நாட்டில் அவதரிப்பது எந்நாளோ? https://youtu.be/31i0UQb58dw
9. மெய்ஞ்ஞான மெய்விளக்கு https://youtu.be/MtnS-9g270o
10. வஞ்சக்காரர்கள் கை கோவாமல் https://youtu.be/IUvqIGbKQ3M

# துணைநின்ற நூல்கள்.


1. தாயுமானவர் பாடல்கள், புலவர் வீ.சிவஞானம், விஜயா பதிப்பகம், கோவை.
2. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு
3. இணையதள தகவல்கள்
4. தாயுமானவர் நூல்கள், சுவாமி சித்பவானந்தர், திருப்பராய்த்துறை.
5. இணையதள தகவல்கள்.
6. உலக சமாதானம், வேதாத்திரி மகரிஷி, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு.

7. தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு, மன்னார்குடி பானுகுமார். அழகுப் பதிப்பகம், சென்னை.
8. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும், மன்னார்குடி பானுகுமார். விஜயா பதிப்பகம், கோவை.

# பானுகுமார் படைப்புலகம்

(164 புத்தகங்கள்) 2187 vi di os

PDF www.banukumar.i n

## ஆன்மீகம்

1. தியானம் பழக 100 தியான சிந்தனைகள்
2. அறிவியல் நோக்கில் 100 ஆன்மீகச் சிந்தனைகள்
3. கோள்களை வென்ற இடைக்காட்டுச் சித்தர்

## வாழ்க்கை வரலாறு

1. நெப்போலியன் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
2. புத்தர் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
3. இயேசுவின் வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
4. குருவுடன் வாழ்ந்தவர் (புலவர் தியாகராஜனார்)
5. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்

## தன்னம்பிக்கை தன்னம்பிக்கை

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை

## வேதாத்திரி மகரிஷி 1

1. இந்திய தத்துவ வரலாற்றில் வேதாத்திரி மகரிஷி
2. வேதாத்திரி மகரிஷி பற்றி 100 அறிஞர்கள்.
3. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 1)
4. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 2)
5. வேதாத்திரி மகரிஷியின் பொன்மொழிகள் 5000 (பாகம் 3 )
6. தினசரி தியானம்.
7. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
8. “வாழ்க வளமுடன்” என்ற வார்த்தை! சரியா? தவறா? இலக்கணம் என்ன சொல்கிறது?
9. பன்முகப்புரட்சியில் வேதாத்திரி மகரிஷி
10. பன்முகப் பார்வையில் வேதாத்திரி மகரிஷி
11. வேதாத்திரி மகரிஷியின் தத்துவ தரிசனங்கள்
12. எல்லாம் வல்ல தெய்வமது
13. போரில்லா நல்லுலகம்
14. அதுவானால் அதுவே சொல்லும்
15. உய்யும் வகை தேடி அலைந்தேன்.
16. தினந்தோறும் வேதாத்திரியம்
17. வாழும் வேதாத்திரியம்
18. என்னைச் செதுக்கிய வேதாத்திரியத்தின் ஞானக்களஞ்சியம்
19. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள்
20. மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்
21. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
22. வேதாத்திரியம் கற்போம்
23. மனைவிக்கு மரியாதை
24. எல்லாம் வல்ல தெய்வமது
25. வேதாத்திரியப் பார்வையில் வறுமை என்பது இல்லை.
26. அவதாரப் புருஷர் அருட்தந்தை
27. வேதாத்திரியம் ஒரு ஜீவ யாத்திரை

## ஒப்பாய்வு (வேதாத்திரி மகரஷி)

1. வள்ளலாரும் வேதாத்திரி மகரிஷியும்.
2. மகாவீரரும் வேதாத்திரி மகரிஷியும்
3. தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும்
4. ஞாலம் போற்றும் ஞானிகள்
5. வேதாத்திரியத்தில் கலந்த நதிகள்.
6. ஞானதீபமும் ஞான ஒளியும்.
7. கிழக்கும் மேற்கும்
8. வேதமுதல்வரும் வேதாத்திரியும்
9. ஞான வள்ளல்கள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரஷியும்)
10. பாமரமக்களின் தத்துவஞானிகள் (அச்சில்)
11. சித்தர்களும் வேதாத்திரி மகரிஷியும்.
12. மாணிக்க வாசகரும் வேதாத்திரியும்
13. சிவவாக்கியாரும் வேதாத்திரி மகரிஷியும்.
14. ஆனந்தக் களிப்பும் பேரின்பக் களிப்பும்
15. சுகவாரியும் பேரின்ப ஊற்றும்
16. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
17. கன்பூசியசும் வேதாத்திரி மகரிஷியும்
18. ஐன்ஸ்டைனும் வேதாத்திரியும்

## தாயுமானவரும் வேதாத்திரி மகரிஷியும் (ஒப்பாய்வு)

1. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்.
2. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு.
3. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்.
4. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோமானந்தம்.
5. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைந்த பொருள்..
6. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சச்திதானந்த சிவம்.

7. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் கருணாகரக் கடவுள்
8. தாயுமானவர் வள்ளலார் வேதாத்திரி மூவரும் ஒருவரே
9. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பாயப்புலி
10. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பைங்கிளிக் கண்ணி
11. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொன்னை மாதரை
12. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆகார புவனம்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எந்நாட்கண்ணி
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சித்தர் கணம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
17. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இந்திரியங்களின் கொட்டம்
18. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மனம் என்னும் மாயை
19. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆறுபகைவர்கள்
20. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் அருள்தாகம்
21. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் இறைவழிபாடு
22. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் வழிபாடு ஏன்,
23. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்த இயல்பு
24. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 1
25. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 2
26. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பராபரக்கண்ணி பாகம் 3

## திருவாசகமும் வேதாத்திரியமும் (**ஒப்பாய்வு**)

1. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
2. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து.
3. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து.
4. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலாப் பத்து.
5. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து.
6. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து.
7. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்தப் பத்து.
8. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்தப் பத்து.
9. வேதாத்திரியப் பார்வையில்திருவாசகத்தின் பிரார்த்தனைப் பத்து.
10. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
11. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து
12. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சோ பதிகம்
13. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
14. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
15. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
16. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
17. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
18. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
19. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
20. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
21. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
22. வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து

## பாரதியாரும் வேதாத்திரியமும் **(ஒப்பாய்வு)**

1. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப்பாடல்கள்
2. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவப் பாடல்கள்
3. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
4. வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் மானுட சிந்தனைகள்

## ஜென்னும் வேதாத்திரியமும்

1. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
2. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
3. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
4. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
5. ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5

## தாயுமானவர் தாயுமானவர்

1. சேரவாரும் ஜெகத்தீரே
2. தாயுனவரின் இலக்கிய நயம்
3. தாயுமானவரின் மெய்ப்பொருள்
4. தாயுமானவரின் சமயநெறி
5. தாயுமானவரின் உடல் பொய்யுறவா?
6. தாயுமானவரின் கடவுள் கோட்பாடு
7. தாயுமானவரும் மகான்களும்
8. தாயுமானவர் ஆன்மீக வாதியா? அரசியல் ஞானியா?
9. தாயுமானவர் தரும் இடம், பொருள், ஏவல்
10. தாயுமானவரின் அத்வைதமும் வேதாத்திரியின் அத்வைதமும்
11. தாயுமானவரின் ஆன்மீகச் சிந்தனைகள்
12. தாயுமானவரின் ஞானதாகம்
13. தாயுமானவரின் இலட்சியப் பயணம்
14. தாயுமானவரின் பிரபஞ்சக் கோட்பாடு
15. தாயுமானவரின் உயிர் விளக்கம்
16. GARLAND OF PARAAPARAM
17. தாயுமானவர் போற்றும் அறம்
18. அறிவேதான் தெய்வமென்றார் தாயுமானவர்
19. ஏன் அவதரித்தார்கள்?
20. தாயுமானவரின் பரநடையும் உலக நடையும்
21. இன்பம் பெறும் வழி யாது? தாயுமானவர்
22. தாயுமானவர் பாடல்களில் மனம்
23. தாயுமானவர் வழிபாடு ஏன்?
24. தாயுமானவருக்கு மறுபிறவி உண்டா?
25. கல்லாத பேர்களே நல்லவர்கள் தாயுமானவர்

26. கடவுளின் விலாசம் தருகிறார் தாயுமானவர்
27. தாயுமானவர் எதை பலி கொடுக்கச் சொன்னார்?
28. தாயுமானவர் தரும் இறைவழிபாடு
29. தாயுமானவருடன் வாழ்வோம்
30. தாயுமானவரின் உவமைகள் 100

## ஜென்னும் திருவாசகமும்

1. ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
2. ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
3. ஜென்னும் திருவாசகமும் பாகம் 3

## புலவர் தியாகராஜனார்

1. குருவுடன் வாழ்ந்தவர்
2. வரலாறு போற்றும் குரு சீடர்கள்
3. புலவர் தியாகராஜனார் அரிய செய்திகள் 100
4. குரு பக்தியின் வடிவம் புலவர் தியாகராஜனார்

## மன்னார்குடி

1. மன்னார்குடி மன்னார்குடிதான் அரிய செய்திகள் 1000
2. ஞாபகம் வருதே ஊர் ஞாபகம் வருதே!
3. மன்னார்குடி வரலாறு

## **தன்னம்பிக்கை தன்னம்பிக்கை**

1. தன்னம்பிக்கை மலர்கள்.
2. டென்சனை வெல்வது எப்படி?
3. காலமே உன் உயிர்
4. வேதாத்திரி மகரிஷியின் வாழ்வை வளமாக்கும் எண்ணங்கள்.
5. ஓய்வுக்குப் பின்னும் உற்சாக வாழ்க்கை
6. தன்னம்பிக்கை மலர்கள்

## **சிறுகதைகள்**

1. செயலே விளைவு
2. தவம்

## ஆராய்ச்சி

நன்மக்கட்பேறு 100 நற்சிந்தனைகள்

## vethathiriam Banukumar (Youtube channel)


2000 க்கும் மேற்பட்ட விடியோக்களை அடியிற்கண்ட 125 தலைப்புகளில் vethathiriam Banukumar vஎன்ற யூடியூப் சேனலில் கேட்டு மகிழலாம்.

1. வேதாத்திரி மகரிஷி வாழ்வில் 100 சுவையான நிகழ்ச்சிகள் பாகம்
2. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 1
3. வேதாத்திரி மகரிஷி ஒப்பாய்வு இலக்கியம் பாகம் 2
4. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
5. விவேகானந்தரும் வேதாத்திரி மகரிஷியும் பாகம் 1
6. விவேகானந்தர் கதைகளும் வேதாத்திரியமும்
7. ராமகிருஷ்ணர் கதைகளும்
8. வேதாத்திரியமும் ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிஷியும்
9. பட்டினத்தாரும் வேதாத்திரி மகரிஷியும்
10. பென்ஞமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிஷியும்
11. மாக்கிய வெல்லியும் வேதாத்திரி மகரிஷியும்
12 தாயுமானவரின் சுகவாரியும் வேதாத்திரியாரின் பேரின்பக் ஊற்றும்
13. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரசிவ வணக்கம்.
14. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பரிபூராணானந்தம்
15. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் ஆனந்தமான பரம்
16. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மௌனகுரு வணக்கம்
17.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் தேஜோ மயானந்தம்
18.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் பொருள் வணக்கம்
19.வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் சின்மயானந்த குரு
20.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் பிடித்த பத்து
21.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அதிசயப் பத்து
22. வேதாத்திரிய பார்வையில் திருவாசகத்தின் பிரார்த்தனைப்பத்து
23.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அடைக்கலப் பத்து
24.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குழைத்த பத்து
25.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆசைப் பத்து

26.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் செத்திலா பத்து
27.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் உயிர் உண்ணிப் பத்து
28.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் யாத்திரைப் பத்து.
29.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அச்சப் பத்து
30.வேதாத்திரியப் பார்வையில்தி ருவாசகத்தின் அச்சோ பதிகம்
31.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சிவபுராணம்
32.மாணிக்கவாசகரும் வேதாத்திரி மகரிஷியும்
33.புத்தக வெளியீடு
34.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 1
35.வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 2
36. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 3
37. வேதாத்திரிய சிந்தனைகள் பாகம் 4
38.வேதாத்திரியப் பார்வையில்பாரதியாரின் மானுட சிந்தனைகள்
39.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் ஞானப் பாடல்கள்
40.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் பிரம்மஞானம்
41.வேதாத்திரியப் பார்வையில் பாரதியாரின் தத்துவ பாடல்கள்
42.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 1
43.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 2
44.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 3
45ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 4
46.ஜென்னும் வேதாத்திரியமும் பாகம் 5
47.காலமெல்லாம் வேதாத்திரியம்
48.வேதாத்திரியப் பார்வையில் ஆழ்வார்கள் காட்டும் முக்தி
49.என்னைச் செதுக்கிய நூல்
50.தினசரி தியானம் சனவரி
51.தினசரி தியானம் பிப்ரவரி
52.தினசரி தியானம் மார்ச்
53.தினசரி தியானம் ஏப்ரல்
54.தினசரி தியானம் மே
55.தினசரி தியானம் ஜூன்
56.தினசரி தியானம் ஜூலை
57.தினசரி தியானம் ஆகஸ்டு
58.தினசரி தியானம் செப்டம்பர்
59.தினசரி தியானம் அக்டோபர்
60.தினசரி தியானம் நவம்பர்

61.தினசரி தியானம் டிசம்பர்
62.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 1
63. தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 2
64.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 3
65.தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 4
66தாயுமானவரின் சிந்தனைகள் பாகம் 5
67.தாயுமானவர் ஒப்பாய்வு இலக்கியம்
68.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 1
69.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 2
70.ஜென் புத்தரும் தாயுமானவரும் பாகம் 3
71.தாயுமானவரின் ஆனந்தக்களிப்பு
72.மாணிக்கவாசகர் சிந்தனைகள்
73.ஜென்னும் திருவாசகமும் பாகம் 1
74.ஜென்னும் திருவாசகமும் பாகம் 2
75.ஜென்னும் திருவாசகமும் பாகம் 3
76.புலவர் தியாகராஜனார்
77.ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 1
78. ஞாபக அலைகள் (மன்னார்குடி) பாகம் 2
79.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 1
80.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 2
81.அறிவியல் நோக்கில் ஆன்மீகச் சிந்தனைகள் பாகம் 3
82.ஆன்மீகம் ஆன்மீகம்
83.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 1
84.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 2
85.டென்சனை வெல்வது எப்படி? பாகம் 3
86.தன்னம்பிக்கை தன்னம்பிக்கை
87.சுயமுன்னேற்றம்
88.பத்திரகிரியார் சிந்தனைகள்
89.மன்னார்குடி
90.ஆராய்ச்சி நன்மக்கட்பேறு
91.பொதுவானவை
92.மனைவிக்கு மரியாதை
93.திருமூலர் சிந்தனைகள்.
94.ஆண்டாள் சிந்தனைகள்
95.திருமழிசைஆழ்வார் சிந்தனைகள்

96.திருக்குறள; சிந்தனைகள்
97.அப்பர் சிந்தனைகள்
98.பட்டினத்தார் சிந்தனைகள்
99.பட்டினத்தார் ஒப்பாய்வு
100.சிவவாக்கியார் சிந்தனைகள்
101.ஔவையார் சிந்தனைகள்
102.சித்தர்கள் சிந்தனைகள்
103.திருமங்கையாழ்வார்
104.வள்ளலாரின் சிந்தனைகள்
105.பசி என்னும் பாவி
106.பொருள் வறுமையா? அறிவு வறுமையா?
107. Retirement Speech
108..Audio speech part 1
109.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அருட்பத்து
110.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அற்புதப்பத்து
111.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் அன்னைப்பத்து
112.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் கண்டபத்து
113.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குயிற்பத்து
114.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் சென்னிப்பத்து
115.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் புணர்ச்சிப்பத்து
116.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் வாழாப்பத்து
117.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் குலாப்பத்து
118.வேதாத்திரியப் பார்வையில் திருவாசகத்தின் ஆனந்த பரவசம்
119. மனவளக்கலையில் வாசி யோகமா?
120..வேதாத்திரியம் மானுட வேதம்
121. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் மலைவளர்க் காதலி
122. வேதாத்திரியப் பார்வையில் தாயுமானவரின் எங்கும் நிறைகின்ற பொருள்
123.வேதாத்திரியப் பார்வையில் கருணாகரக் கடவுள்
124. மனவளக்கலையின் மகத்துவம்
125 அருட்தந்தையே நீ ஒரு அற்புதம்


குருவே துணை
வாழ்க வையகம்
வாழ்க வளமுடன்
வேதாத்திரிய
பார்வையில்
தாயுமானவரின்
எந்நாள் கண்ணி
பாகம் 2
பேராசிரியர்,
எழுத்தாளர் திரு
மன்னார்குடி
பானுகுமார் ஐயா
அவர்கள்